# மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

## கடன் அட்டைகளுக்கு

(MITC_V6 03.10.2026 அன்று புதுப்பிக்கப்பட்டது)

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், அத்துடன் அனைத்துத் தகவல்களும், வங்கியின் கிரெடிட் கார்டு தயாரிப்பில் ஆர்வம் காட்டும் பொது மக்கள், வங்கியின் வாடிக்கையாளர்கள், கிரெடிட் கார்டு விண்ணப்பதாரர்கள் மற்றும் கிரெடிட் கார்டு வைத்திருப்பவர்கள் ஆகிய அனைவருக்கும் பொருந்தும். இந்த முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (MITC) அவ்வப்போது மாற்றத்திற்கு உட்பட்டவை. குறிப்பிடப்பட்ட MITC-கள், வங்கியின் கார்டுதாரர் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கூடுதலாகவும், அவற்றுடன் இணைத்தும் வாசிக்கப்பட வேண்டும்.

**A. கட்டணப் பட்டியல்**

**1. சேர்ப்புக் கட்டணம், வருடாந்திரக் கட்டணம் மற்றும் கூடுதல் அட்டைக்கான கட்டணம்**

| கடன் அட்டை வகை | சேர்ப்புக் கட்டணம் (இந்திய ரூ) (அட்டை ஆக்டிவேட் செய்யப்பட்ட பின்னர் விதிக்கப்படும்)* | வருடாந்திரக் கட்டணம் 2-வது ஆண்டு முதல் (இந்திய ரூ)* | ஆட்-ஆன் கார்டு கட்டணம் (ஒருமுறை கட்டணம்) |
|---|---|---|---|
| CUB CSK/SRH ரூபே பிளாட்டினம் கடன் அட்டை (வாழ்நாள் முழுவதும் இலவசம்) | இல்லை | இல்லை | ₹ 500 + GST |
| CUB CSK/SRH மாஸ்டர் பிளாட்டினம் கடன் அட்டை (முதல் ஆண்டு இலவசம்) | இல்லை | ₹ 1000 + GST (₹3 இலட்சம் செலவிட்டால் தள்ளுபடியாகும்) | ₹ 500 + GST |
| CUB CSK/SRH மாஸ்டர் வேர்ல்ட் கடன் அட்டை (முதல் ஆண்டு இலவசம்) | இல்லை | ₹ 4000 + GST (₹ 5 இலட்சம் செலவிட்டால் தள்ளுபடியாகும்) | ₹ 500 + GST |
| CUB சாலரிசே லெவல் அப் கடன் அட்டை (வாழ்நாள் முழுவதும் இலவசம்) | இல்லை | இல்லை | ₹ 500 + GST |

| | | | |
|---|---|---|---|
| CUB சாலரிசே லெவல் அப் கடன் அட்டை (கட்டண அட்டை வகை.) | ₹ 500 + GST | ₹500 + GST (₹2 இலட்சம் செலவிட்டால் தள்ளுபடியாகும் ) | ₹ 500 + GST |
| CUB கவாச் ரூபே / மாஸ்டர் கடன் அட்டை | இல்லை | இல்லை | பொருந்தாது |
| CUB சாஸ்த்ரா அலும்னை ரூபே / மாஸ்டர் பிளாட்டினம் கடன் அட்டை | இல்லை | இல்லை | பொருந்தாது |
| CUB சாஸ்த்ரா அலும்னை ரூபே செலக்ட் கடன் அட்டை | ₹ 999 + GST | ₹999 + GST (₹2 இலட்சம் செலவிட்டால் தள்ளுபடியாகும் ) | பொருந்தாது |

## 2. நிதி / வட்டி கட்டணம்

| கடன் அட்டை வகை | நீட்டிக்கப்பட்ட கடனுக்கான காலங்கடந்த வட்டி | | ரொக்க முன்பணங்கள் மீதான வட்டி | |
|---|---|---|---|---|
| | மாதாந்திர விகிதம் | வருடாந்திர விகிதம் | மாதாந்திர விகிதம் | வருடாந்திர விகிதம் |
| CUB CSK/SRH ரூபே பிளாட்டினம் கடன் அட்டை (வாழ்நாள் முழுவதும் இலவசம்) | 3.5% மாதத்திற்கு | 42% ஆண்டுக்கு | 3.5% மாதத்திற்கு | 42% ஆண்டுக்கு |
| CUB CSK/SRH மாஸ்டர் பிளாட்டினம் கடன் அட்டை (முதல் ஆண்டு இலவசம்) | 3.5% மாதத்திற்கு | 42% ஆண்டுக்கு | 3.5% மாதத்திற்கு | 42% ஆண்டுக்கு |
| CUB CSK/SRH மாஸ்டர் வேர்ல்ட் கடன் அட்டை (முதல் ஆண்டு இலவசம்) | 3.5% மாதத்திற்கு | 42% ஆண்டுக்கு | 3.5% மாதத்திற்கு | 42% ஆண்டுக்கு |
| CUB சாலரிசே லெவல் அப் கடன் அட்டை (வாழ்நாள் முழுவதும் இலவசம்) | 3.5% மாதத்திற்கு | 42% ஆண்டுக்கு | 3.5% மாதத்திற்கு | 42% ஆண்டுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| CUB சாலரிசே லெவல் அப் கடன் அட்டை (கட்டண அட்டை வகை) | 3.5% மாதத்திற்கு | 42% ஆண்டுக்கு | 3.5% மாதத்திற்கு | 42% ஆண்டுக்கு |
| CUB கவாச் ரூபே / மாஸ்டர் கடன் அட்டை | 2% மாதத்திற்கு | 24% ஆண்டுக்கு | 2% மாதத்திற்கு | 24% ஆண்டுக்கு |
| CUB சாஸ்த்ரா அலும்னை ரூபே / மாஸ்டர் பிளாட்டினம் கடன் அட்டை | 3.5% மாதத்திற்கு | 42% ஆண்டுக்கு | 3.5% மாதத்திற்கு | 42% ஆண்டுக்கு |
| CUB சாஸ்த்ரா அலும்னை ரூபே செலக்ட் கடன் அட்டை | 3.5% மாதத்திற்கு | 42% ஆண்டுக்கு | 3.5% மாதத்திற்கு | 42% ஆண்டுக்கு |

## 3. நிதி / வட்டி கட்டணம் விவரங்கள்

அட்டைதாரர் முந்தைய பில்லுக்கான தொகையை, அதற்கான கடைசித் தேதிக்குள் (அட்டை அறிக்கையின்படி) முழுமையாகச் செலுத்தத் தவறினால், வட்டி விதிக்கப்படும். பரிவர்த்தனை செய்யப்பட்ட நாளிலிருந்து நிலுவைத் தொகை முழுமையாகச் செலுத்தப்படும் நாள் வரை வட்டி வசூலிக்கப்படும். அட்டைதாரர் 'ரிவால்விங் கிரெடிட்' வசதியைப் பயன்படுத்தினால், முந்தைய கணக்கு அறிக்கையிலிருந்து நிலுவையில் உள்ள தொகை மற்றும் புதிய பரிவர்த்தனைகள் (கடன் அட்டை மூலமான கடன்களுக்கான கட்டணம் விதிக்கப்பட்ட தவணைத் தொகைகள் உட்பட) ஆகியவற்றுக்கு, செலுத்த வேண்டிய மொத்தத் தொகையும் முழுமையாகச் செலுத்தப்படும் தேதி வரை வட்டி விதிக்கப்படும். பணம் எடுக்கப்பட்ட தேதியிலிருந்து திருப்பிச் செலுத்தப்படும் தேதி வரை அனைத்து ரொக்க முன்பணங்களுக்கும் வட்டி விதிக்கப்படும். கட்டணங்கள், இதர கட்டணங்கள் மற்றும் ஜிஎஸ்டி ஆகியவற்றின் மீது வட்டி கணக்கிடப்படாது. வாடிக்கையாளர் மேற்கொள்ளும் செலவுகள், விதிக்கப்படும் வட்டி மற்றும் ஈஎம்ஐ ஆகியவற்றின் மீது வட்டி தொடர்ந்து சேரும்.

## 4. பிற கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| தாமதமாகச் செலுத்துவதற்கான கட்டணம் | அனைத்து கடன் அட்டைகளுக்கும் | ₹25,000-வரை நிலுவைகள்: ₹350/- ₹25,000-க்கு மேல் நிலுவைகள்: ₹450/- |
| வரம்பு மீறல் கட்டணம் | அனைத்து கடன் அட்டைகளுக்கும் | வரம்பு மீறல் தொகையில் 3%,குறைந்தபட்சம் ₹250/- |

| | | |
|---|---|---|
| வரம்பு உயர்த்தல் கட்டணம் (லிமிட் என்ஹேன்ஸ்மெண்ட் ஃபீ) | கீழே குறிப்பிட்ட கடன் அட்டை தவிர அனைத்து கடன் அட்டைகளுக்கும் | ஒவ்வொரு முறையும் ₹200 |
| | சாலரிசே லெவல் அப் கடன் அட்டை (கட்டண அட்டை வகை) | முதல் முறை இலவசம்; அதன் பிறகு ஒவ்வொரு முறையும் ₹200. |
| காசோலை திருப்புதல் கட்டணம் / செல்லாத காசோலை கட்டணம் | அனைத்து கடன் அட்டைகளுக்கும் | காசோலை திரும்பப்பெறப்பட்டால் (காசோலை பவுன்ஸ்) ₹300 |
| கடன் அட்டை மறு வெளியீடு | கீழே குறிப்பிட்ட கடன் அட்டை தவிர அனைத்து கடன் அட்டைகளுக்கும் | ₹300 |
| | சாலரிசே லெவல் அப் கடன் அட்டை (வாழ்நாள் முழுவதும் இலவசம்) | ₹0 |
| | கவாச் கடன் அட்டைக்கு | பொருந்தாது |
| பின் மெய்லர் மீண்டும் அளிப்பதற்கான கட்டணம் | அனைத்து கடன் அட்டைகளுக்கும் | பொருந்தாது |
| வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை கட்டணம் (மார்க்-அப் கட்டணம்) / DCC கட்டணம் | கீழே குறிப்பிட்ட கடன் அட்டை தவிர அனைத்து கடன் அட்டைகளுக்கும் | பரிவர்த்தனைத் தொகையில் 3.5% |
| | சாலரிசே லெவல் அப் கடன் அட்டை (வாழ்நாள் முழுவதும் இலவசம்) / கவாச் கடன் அட்டை | பரிவர்த்தனைத் தொகையில் 2% |
| | சாலரிசே லெவல் அப் கடன் அட்டை (கட்டண அட்டை வகை) / CUB சாஸ்த்ரா அலும்னை ரூபே செலக்ட் கடன் அட்டை | பரிவர்த்தனைத் தொகையில் 1% |
| | CSK/SRH மாஸ்டர் வேர்ல்ட் கடன் அட்டை | பரிவர்த்தனைத் தொகையில் 0% |

| | | |
|---|---|---|
| வாடகை கூடுதல் கட்டணம் | அனைத்து கடன் அட்டைகளுக்கும் | பரிவர்த்தனைத் தொகையில் 1% |
| வாலெட் லோடு பரிவர்த்தனை கட்டணம் | அனைத்து கடன் அட்டைகளுக்கும் | பரிவர்த்தனைத் தொகையில் 1% |
| ஃபூயல் பரிவர்த்தனை கட்டணம் | அனைத்து கடன் அட்டைகளுக்கும் | ஒரு அறிக்கை சுழற்சியில் (statement cycle) எரிபொருள் பரிவர்த்தனைகளுக்கான மொத்தச் செலவு ₹50,000 அல்லது அதற்கு மேல் இருந்தால், 1% கட்டணம் விதிக்கப்படும். |
| பயன்பாட்டு பரிவர்த்தனை கட்டணம் | அனைத்து கடன் அட்டைகளுக்கும் | ஒரு அறிக்கை சுழற்சியில் (statement cycle) பயன்பாட்டு பரிவர்த்தனைகளுக்கான மொத்தச் செலவு ₹25,000 அல்லது அதற்கு மேல் இருந்தால், 1% கட்டணம் விதிக்கப்படும். |
| ஆன்லைன் திறன் அடிப்படையிலான கேமிங் பரிவர்த்தனை கட்டணம் | அனைத்து கடன் அட்டைகளுக்கும் | ஒரு அறிக்கை சுழற்சியில் (statement cycle) ஆன்லைன் திறன் அடிப்படையிலான கேமிங் பரிவர்த்தனைகளுக்கான மொத்தச் செலவு ₹10,000 அல்லது அதற்கு மேல் இருந்தால், 1% கட்டணம் விதிக்கப்படும். |
| அறிக்கை பெறுவதற்கான கட்டணம் | கீழே குறிப்பிட்ட கடன் அட்டை தவிர அனைத்து கடன் அட்டைகளுக்கும் | அச்சிடப்பட்ட அறிக்கை > 3 மாதங்கள் – ஒவ்வொரு அறிக்கைக்கும் ₹50<br><br>ஆன்லைன் அறிக்கை – கடந்த 12 மாதங்களுக்கு – இலவசம் |
| | சாலரிசே லெவல் அப் கடன் அட்டை (வாழ்நாள் முழுவதும் இலவசம் / கட்டண அட்டை வகை ) / கவாச் கடன் அட்டை | அச்சிடப்பட்ட அறிக்கை > 3 மாதங்கள் – ஒவ்வொரு அறிக்கைக்கும் ₹100<br><br>ஆன்லைன் அறிக்கை – கடந்த 12 மாதங்களுக்கு – இலவசம் |
| கட்டண ஸ்லிப் பெறுவதற்கான கட்டணம் | அனைத்து கடன் அட்டைகளுக்கும் | ₹250 |
| ATM வழியாக இருப்பு விசாரணை | அனைத்து கடன் அட்டைகளுக்கும் | சொந்த வங்கி ATM-ல் - கட்டணம் இல்லை |

| | | |
|---|---|---|
| | | பிற வங்கி ATM-ல் - ₹50 |
| இந்தியாவில் எந்த ஒரு ATM-களிலும் ரொக்கம் எடுப்பதற்கு | கீழே குறிப்பிட்ட கடன் அட்டை தவிர அனைத்து கடன் அட்டைகளுக்கும் | பணம் எடுக்கும் தொகையில் 3% அல்லது ₹250 - இதில் எது அதிகமோ அது |
| | கவாச் கடன் அட்டைக்கு | பணம் எடுக்கும் தொகையில் 2% அல்லது ₹250 - இதில் எது அதிகமோ அது |
| வெளிநாட்டில் உள்ள எந்த ஒரு ATM-களிலும் ரொக்கம் எடுப்பதற்கு | கீழே குறிப்பிட்ட கடன் அட்டை தவிர அனைத்து கடன் அட்டைகளுக்கும் | பணம் எடுக்கும் தொகையில் 3.5% அல்லது ₹1000 - இதில் எது அதிகமோ அது |
| | கவாச் கடன் அட்டைக்கு | பணம் எடுக்கும் தொகையில் 2% அல்லது ₹1000 - இதில் எது அதிகமோ அது |
| ஃபூயல் சர்சார்ஜ் வெய்வர் | கீழே குறிப்பிட்ட கடன் அட்டை தவிர அனைத்து கடன் அட்டைகளுக்கும் | இந்தியா முழுவதும் உள்ள அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் எரிபொருள் பரிவர்த்தனைக மீது 1% ஃபூயல் சர்சார்ஜ் வெய்வர் வழங்கப்படும் |
| | | ₹400 ~₹3,000-க்கு இடையில் உள்ள எரிபொருள் பரிவர்த்தனைகளுக்கு மட்டும் செல்லும். |
| | | ஒரு அறிக்கை சுழற்சிக்கு அதிகபட்சப்ம் ₹ 300 வரை வழங்கப்படும் |
| | CSK/SRH மாஸ்டர் பிளாட்டினம் & மாஸ்டர் வேர்ல்ட் கடன் அட்டை | இந்தியா முழுவதும் உள்ள அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் எரிபொருள் பரிவர்த்தனைக மீது 1% ஃபூயல் சர்சார்ஜ் வெய்வர் வழங்கப்படும் |
| | | ₹400 ~₹5,000-க்கு இடையில் உள்ள எரிபொருள் பரிவர்த்தனைகளுக்கு மட்டும் செல்லும். |
| | | ஒரு அறிக்கை சுழற்சிக்கு அதிகபட்சப்ம் ₹ 500 வரை வழங்கப்படும் |

| | | |
|---|---|---|
| | CUB சாஸ்த்ரா அலும்னை ரூபே செலக்ட் கடன் அட்டை | இந்தியா முழுவதும் உள்ள அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் எரிபொருள் பரிவர்த்தனைக மீது 1% ஃபூயல் சர்சார்ஜ் வெய்வர் வழங்கப்படும் |
| | | ₹400 ~₹3,000-க்கு இடையில் உள்ள எரிபொருள் பரிவர்த்தனைகளுக்கு மட்டும் செல்லும். |
| | | ஒரு அறிக்கை சுழற்சிக்கு அதிகபட்சப்ம் ₹ 700 வரை வழங்கப்படும் |
| கார்டு ஹாட் லிஸ்டிங் கட்டணம் | அனைத்து கடன் அட்டைகளுக்கும் | பொருந்தாது |
| ஆட் ஆன் கார்டு வழங்குவதற்கான கட்டணம் | கீழே குறிப்பிட்ட கடன் அட்டை தவிர அனைத்து கடன் அட்டைகளுக்கும் | ₹500 |
| | கவாச் கடன் அட்டைக்கு / CUB சாஸ்த்ரா அலும்னை ரூபே செலக்ட் கடன் அட்டை | பொருந்தாது |
| கீசெய்ன் FOB-யை அளிப்பதற்கான கட்டணம் | கீழே குறிப்பிட்ட கடன் அட்டை தவிர அனைத்து கடன் அட்டைகளுக்கும் | ₹400 |
| | சாலரிசே லெவல் அப் கடன் அட்டை (வாழ்நாள் முழுவதும் இலவசம் / கட்டண அட்டை வகை ) / கவாச் கடன் அட்டை / CUB சாஸ்த்ரா அலும்னை ரூபே செலக்ட் கடன் அட்டை | பொருந்தாது |
| மாஸ்டர் பிளாட்டினம் மற்றும் மாஸ்டர் வேர்ல்ட் கார்டு வைத்திருப்பவர்களுக்கு | கீழே குறிப்பிட்ட கடன் அட்டை தவிர அனைத்து கடன் அட்டைகளுக்கும் | ₹ 250 |

| | | |
|---|---|---|
| அச்சிடப்பட்ட ரூபே கார்டை வழங்குவதற்கான கட்டணம் | சாலரிசே லெவல் அப் கடன் அட்டை (வாழ்நாள் முழுவதும் இலவசம் / கட்டண அட்டை வகை ) / கவாச் கடன் அட்டை | பொருந்தாது |
| | CUB சாஸ்த்ரா அலும்னை மாஸ்டர் பிளாட்டினம் கடன் அட்டை | இல்லை |
| EMI மாற்றத்துக்கான கட்டணம் | அனைத்து கடன் அட்டைகளுக்கும் | பரிவர்த்தனை தொகையில் 2% - குறைந்தபட்சம் ₹200 ,அதிகபட்சம் ₹1,000 |
| EMI-யினை முன்னரே முடிப்பதற்கான கட்டணம் | அனைத்து கடன் அட்டைகளுக்கும் | நிலுவையிலுள்ள தொகையில் 5% |

**குறிப்பு:**

I. இந்திய அரசினால் அறிவிக்கப்பட்டபடி சரக்கு மற்றும் சேவை வரியானது (GST), எல்லாக் கட்டணங்கள், வட்டி, மற்றும் பிற கட்டணங்களின்மீதும் பொருந்தும். இந்திய அரசின் தொடர்புடைய ஒழுங்குமறைகளின்படி மாற்றத்திற்கு உட்பட்டது.

II. அட்டைதாரருக்குக் குறைந்தது ஒரு மாத காலத்திற்கு முன்னதாகவே உரிய அறிவிப்பை வழங்குவதன் மூலம், அவ்வப்போது கட்டணங்கள் அல்லது வரிகளை மாற்றியமைக்கவோ அல்லது புதிய கட்டணங்கள் அல்லது வரிகளை அறிமுகப்படுத்தவோ சிட்டி யூனியன் வங்கிக்கு உரிமை உண்டு.

## 5. தாமதமாகச் செலுத்துவதற்கான கட்டணம்:

செலுத்த வேண்டிய தேதிக்குள் பணம் செலுத்தப்படாவிட்டாலோ அல்லது செலுத்த வேண்டிய குறைந்தபட்சத் தொகையை விடக் குறைவான தொகை செலுத்தப்பட்டாலோ, அட்டைதாரருக்குத் தாமதக் கட்டணம் விதிக்கப்படும். தாமதக் கட்டணங்களைத் தவிர்க்க, பணம் செலுத்துவதற்கான கடைசி தேதிக்குள்ளாகவோ அல்லது அதற்கு முன்னதாகவோ சிட்டி யூனியன் வங்கி கிரெடிட் கார்டு கணக்கில் முழுமையான பணம் வரவு வைக்கப்பட வேண்டும். தாமதக் கட்டணங்கள் நிலுவைத் தொகையின் மீது மட்டுமே (அதாவது, உரிய தேதிக்கு முன் பெறப்பட்ட தொகைகளைக் கழித்த பிறகுள்ள தொகையின் மீது) விதிக்கப்படும்; மொத்தத் தொகையின் மீது விதிக்கப்படாது.

## 6. ரொக்கம் எடுப்பதற்கான கட்டணம்:

கார்டு வைத்திருப்பவர், கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பிக்கும்போது தேர்ந்தெடுத்த பயன்பாட்டு விருப்பத்தின் அடிப்படையில், இந்தியா அல்லது வெளிநாடுகளில் உள்ள ஏடிஎம்களில் சிட்டி யூனியன் வங்கி கடன் அட்டையைப் பயன்படுத்திப்

பணத்தை எடுக்கலாம்; எனினும், இது சம்பந்தப்பட்ட ஏடிஎம்களில் அந்த அட்டையின் இசைவுடைமைக்கு (compatibility) உட்பட்டது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களின்படி, இத்தகைய பணமெடுப்புகளுக்குப் பரிவர்த்தனைக் கட்டணம் விதிக்கப்படும்; அத்தொகை அட்டைதாரரின் அடுத்தகட்டக் கணக்கு அறிக்கையில் சேர்க்கப்படும். இவை சிட்டி யூனியன் வங்கிக் கட்டணங்களாகும். சில ஏடிஎம்கள் பணம் எடுப்பதற்கான கட்டணங்களை விதிக்கக்கூடும்; இந்தக் கட்டணங்களுக்கும் சிட்டி யூனியன் வங்கிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

**7. வரம்பு மீறல் கட்டணம்:**

உள் கொள்கை (internal policy), பரிவர்த்தனை தகுதி, வாடிக்கையாளர் விவரம் மற்றும் வாடிக்கையாளரின் ஒப்புதல் ஆகியவற்றைப் பொறுத்து, கடன் வரம்பை மீறும் அட்டைதாரரின் சில பரிவர்த்தனைகளை சிட்டி யூனியன் வங்கி அங்கீகரிக்கலாம். நிலுவைத் தொகையானது கடன் வரம்பை (Credit Limit) மீறினால், அந்த வரம்பிற்கு அதிகமான தொகையில் 3% அளவுக்கு (குறைந்தபட்சம் ரூ. 250-க்கு உட்பட்டு) 'வரம்பு மீறல் கட்டணம்' (over-limit fee) விதிக்கப்படும். கடன்அட்டையின் மீதான வட்டி, ஏதேனும் கட்டணங்கள் மற்றும் வரிகள் ஆகியவை வரம்பு மீறல் கட்டணங்களைக் கணக்கிடுவதற்கு காரணியாக இருக்காது. வரம்பு மீறல் பயன்பாட்டு வசதியைப் (Over-Limit facility) பெற விரும்பும் அட்டைதாரர்களிடமிருந்து சிட்டி யூனியன் வங்கி தெளிவான ஒப்புதலைப் பெறும்.

**8. வாடகை கூடுதல் கட்டணம் :**

MCC 6513 மூலம் அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு வாடகைக் கட்டணத்திற்கும், பரிவர்த்தனைத் தொகையின்மீது 1% வாடகை மிகைக் கட்டணம் விதிக்கப்படும். இந்திய அரசினால் அறிவிக்கப்படும் வரிகள் பொருந்தும். உதாரணமாக - உங்கள் சிட்டி யூனியன் வங்கி கடன் அட்டையைப் பயன்படுத்தி, மூன்றாம் தரப்பு வாடகை செலுத்தும் தளத்தின் மூலம் ரூ. 20,000 செலுத்தினால், பரிவர்த்தனைத் தொகையில் 1% (அதாவது ரூ. 200) மற்றும் அதற்கான வரிகள் கூடுதல் கட்டணமாக வசூலிக்கப்படும். இது ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் பொருந்தும்.

**9. வாலெட் லோடு பரிவர்த்தனை கட்டணம்:**

MCC குறியீடுகள் 6538, 6539, 6540, 6541, மற்றும் 6542 வழியாக அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு வாலெட் லோடு பரிவர்த்தனைக்கும், பரிவர்த்தனை தொகையின் 1% வாலெட் லோடு பரிவர்த்தனை கட்டணமாக விதிக்கப்படும். இந்திய அரசால் அறிவிக்கப்படும் பொருந்தக்கூடிய வரிகள், இந்தக் கட்டணத்துடன் கூடுதலாக வசூலிக்கப்படும். உதாரணமாக - உங்கள் சிட்டி யூனியன் வங்கி கடன் அட்டையைப் பயன்படுத்தி மூன்றாம் தரப்பு வாலட்டில் (third-party wallet) ₹10,000-ஐ ஏற்றினால், ₹10,000-ல் 1% (அதாவது ₹100) மற்றும் அதற்கான பொருந்தக்கூடிய வரிகள் ஆகியவை 'வாலட் லோடு பரிவர்த்தனைக் கட்டணமாக' வசூலிக்கப்படும். இது ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் பொருந்தும்.

**10.ஃபூயல் பரிவர்த்தனை கட்டணம்:**

ஒரு அறிக்கை சுழற்சியில் (statement cycle) எரிபொருள் பரிவர்த்தனைகளுக்கான மொத்தச் செலவு ₹50,000 அல்லது அதற்கு மேல் இருந்தால், 1% கட்டணம் விதிக்கப்படும். MCC 5983, 5541, 5542 மற்றும் 5172 வழியாக ஃபூயல் பரிவர்த்தனைகள் அடையாளம் காணப்படுகின்றன. இந்திய அரசினால் அறிவிக்கப்படும் வரிகள் பொருந்தும். உதாரணமாக - ஒரு அறிக்கை சுழற்சியில் (statement cycle), சிட்டி யூனியன் வங்கி கடன் அட்டையைப் பயன்படுத்தி செய்யப்படும் எரிபொருள் பரிவர்த்தனைகளுக்காக நீங்கள் செய்யும் மொத்தச் செலவு (அனைத்து பரிவர்த்தனைகளின் கூட்டுத்தொகை) ₹50,000-ஆக இருந்தால், பரிவர்த்தனைத் தொகையில் 1% (அதாவது ₹500) மற்றும் அதற்கான வரிகள் கூடுதல் கட்டணமாக வசூலிக்கப்படும். அதேபோல, ஒரு குறிப்பிட்ட அறிக்கை சுழற்சியில் எரிபொருள் பரிவர்த்தனைகளுக்கான உங்கள் மொத்தச் செலவு ₹30,000 என்று வைத்துக்கொண்டால், கூடுதல் கட்டணம் எதுவும் விதிக்கப்படாது.

**11.பயன்பாட்டு பரிவர்த்தனை கட்டணம்:**

ஒரு அறிக்கை சுழற்சியில் (statement cycle) பயன்பாட்டுக் கட்டணங்களுக்காக (utilities payments) மேற்கொள்ளப்படும் மொத்தச் செலவு ₹25,000 அல்லது அதற்கு மேல் இருந்தால், 1% கட்டணம் விதிக்கப்படும். பயன்பாட்டுச் சேவைகள் தொடர்பான பரிவர்த்தனைகள் 4814, 4899 மற்றும் 4900 ஆகிய குறியீடுகள் மூலம் அடையாளம் காணப்படுகின்றன. இந்திய அரசினால் அறிவிக்கப்படும் வரிகள் பொருந்தும். உதாரணமாக - ஒரு அறிக்கை சுழற்சியில் (statement cycle), சிட்டி யூனியன் வங்கி கடன் அட்டையைப் பயன்படுத்தி செய்யப்படும் பயன்பாட்டுப் பரிவர்த்தனைகளுக்காக நீங்கள் செய்யும் மொத்தச் செலவு (அனைத்து பரிவர்த்தனைகளின் கூட்டுத்தொகை) ₹25,000-ஆக இருந்தால், பரிவர்த்தனைத் தொகையில் 1% (அதாவது ₹250) மற்றும் அதற்கான வரிகள் கூடுதல் கட்டணமாக வசூலிக்கப்படும். அதேபோல, ஒரு குறிப்பிட்ட அறிக்கை சுழற்சியில் பயன்பாட்டு பரிவர்த்தனைகளுக்கான உங்கள் மொத்தச் செலவு ₹20,000 என்று வைத்துக்கொண்டால், கூடுதல் கட்டணம் எதுவும் விதிக்கப்படாது.

**12. ஆன்லைன் திறன் அடிப்படையிலான கேமிங் பரிவர்த்தனை கட்டணம்:**

MCC 5816 வழியாக அடையாளம் காணப்பட்ட ஆன்லைன் திறன் அடிப்படையிலான கேமிங் பரிவர்த்தனைகளுக்கு, ஒரு அறிக்கைக் காலத்தில் (statement cycle) பரிவர்த்தனைகள் மீதான மொத்தச் செலவு ₹10,000 அல்லது அதற்கு மேல் இருந்தால், 1% கூடுதல் கட்டணம் விதிக்கப்படும். இந்திய அரசினால் அறிவிக்கப்படும் வரிகள் பொருந்தும். உதாரணமாக - ஒரு அறிக்கை சுழற்சியில் (statement cycle), சிட்டி யூனியன் வங்கி கடன் அட்டையைப் பயன்படுத்தி செய்யப்படும் ஆன்லைன் திறன் அடிப்படையிலான கேமிங் தளங்களில் நீங்கள் செய்யும் மொத்தச் செலவு (அனைத்து பரிவர்த்தனைகளின் கூட்டுத்தொகை) ₹13,000-ஆக இருந்தால், பரிவர்த்தனைத் தொகையில் 1% அதாவது இந்திய ரூ. 130 மற்றும் அதற்கான வரிகள் கூடுதல் கட்டணமாக வசூலிக்கப்படும். அதேபோல, ஒரு

குறிப்பிட்ட அறிக்கை சுழற்சியில் ஆன்லைன் கேமிங் தளங்களில் உங்கள் மொத்தச் செலவு இந்திய ரூ.6,000 என்று வைத்துக்கொண்டால், கூடுதல் கட்டணம் எதுவும் விதிக்கப்படாது.

**13. மாதாந்திர தவணை(EMI) மாற்றத்திற்கு:**

தகுதி பெறும் பரிவர்த்தனைகள், வங்கியின் தகுதி விதிமுறைகளுக்கு உட்பட்டு EMI-ஆக மாற்றப்படலாம். ₹10,000 மற்றும் அதற்கு மேற்பட்ட பரிவர்த்தனைகள் EMI மாற்றத்திற்கு தகுதியுடையவை. இருப்பினும், சாலரி சே கடன் அடைக்கு ₹2,500 மற்றும் அதற்கு மேற்பட்ட பரிவர்த்தனைகள் EMI மாற்றத்திற்கு தகுதியுடையவை.

EMI மாற்றம் 3, 6, 9, 12, 18 மற்றும் 24 மாத காலங்களுக்கு கிடைக்கும். குறையும் நிலுவைத் தொகை (Reducing Balance) அடிப்படையில் ஆண்டுக்கு 16% வட்டி வசூலிக்கப்படும். கார்டுதாரருக்கு கிடைக்கும் காலஅளவு (Tenure) விருப்பங்கள் EMI மாற்றத்தின் போது காட்டப்படும்.

**செயலாக்கக் கட்டணம் (Processing Fee):**

பரிவர்த்தனைத் தொகையின் 2%, குறைந்தபட்சம் ₹200 மற்றும் அதிகபட்சம் ₹1,000 வரை, அதனுடன் பொருந்தும் GST சேர்த்து வசூலிக்கப்படும்.

**முன்கூட்டியே EMI முடித்தல் கட்டணம் (Foreclosure Fee):**

செலுத்தப்படாமல் இருக்கும் அசல் தொகையின் (Outstanding Principal Amount) 5%, அதனுடன் பொருந்தும் GST சேர்த்து வசூலிக்கப்படும்.

**EMI திருப்பிச் செலுத்தும் அட்டவணை – எடுத்துக்காட்டு**

கீழே கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டு, ₹50,000 மதிப்புள்ள ஒரு பரிவர்த்தனை 16% ஆண்டுவட்டி விகிதத்தில், குறையும் நிலுவைத் தொகை அடிப்படையில் EMI-ஆக மாற்றப்பட்டதாகக் கருதி வழங்கப்பட்டுள்ளது.

உண்மையான EMI தொகை, வட்டி மற்றும் மொத்தமாக திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை ஆகியவை, கார்டுதாரர் தேர்வு செய்யும் பரிவர்த்தனைத் தொகை மற்றும் காலஅளவைப் பொறுத்து மாறுபடும். EMI மாற்றத்தின் போது சரியான தொகைகள் காட்டப்படும்.

| EMI - தவணைத் திட்டம் | அசல் தொகை (₹) | வட்டி தொகைக் (₹) | மொத்த செலுத்தும் தொகை (₹) |
|---|---|---|---|
| ₹17,113.07 × 3 மாதங்கள் | 50,000.00 | 1,339.22 | 51,339.22 |
| ₹8,726.51 × 6 மாதங்கள் | 50,000.00 | 2,359.09 | 52,359.09 |
| ₹5,932.47 × 9 மாதங்கள் | 50,000.00 | 3,392.19 | 53,392.19 |
| ₹4,536.54 × 12 மாதங்கள் | 50,000.00 | 4,438.51 | 54,438.51 |
| ₹3,142.82 × 18 மாதங்கள் | 50,000.00 | 6,570.79 | 56,570.79 |
| ₹2,448.16 × 24 மாதங்கள் | 50,000.00 | 8,755.73 | 58,755.73 |

**குறிப்பு:** மேலே கொடுக்கப்பட்டுள்ள EMI விளக்கத்தில் அசல் தொகை மற்றும் வட்டி மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன. செயலாக்கக் கட்டணம் (Processing Fee), வட்டி தொகை மற்றும் செயலாக்கக் கட்டணம் (Processing Fee) மீது பொருந்தக்கூடிய GST ஆகியவை இதில் சேர்க்கப்படவில்லை. இக்கட்டணங்கள் பொருந்தும் பட்சத்தில் தனியாக பில் செய்யப்படும்.

EMI மாற்றங்களுக்கு வங்கியின் இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள விரிவான EMI விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (Terms & Conditions) அனைத்தும் பொருந்தும்.

**B. கடன் மற்றும் ரொக்கம் எடுத்தல் / முன்பணம் கட்டணங்கள்**

- **கடன் வரம்பு:** சிட்டி யூனியன் வங்கியின் மதிப்பீட்டிற்குப் பிறகு அட்டைதாரருக்கு ஒதுக்கப்பட்ட அதிகபட்ச கடன் வரம்பு இதுவாகும். கடன் வரம்பு அட்டைக் கணக்குடன் இணைக்கப்பட்டுள்ளது; இது அனைத்துப் பரிவர்த்தனைகள், கட்டணங்கள் மற்றும் இதர வசூலிப்புகளை உள்ளடக்கியது. மொத்த நிலுவைத் தொகை இந்த வரம்பை மீறக்கூடாது.
- **ரொக்க வரம்பு:** இது அட்டைதாரருக்கு நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச ரொக்கப் பண எடுப்பு வரம்பைக் குறிக்கிறது. இது கடன் வரம்பை விடக் குறைவானது மற்றும் ஒட்டுமொத்த கடன் வரம்பின் ஒரு பகுதியாகும்.
- **பணம் எடுப்பதற்கான பரிவர்த்தனை கட்டணங்கள்:** ஏடிஎம் மூலம் பணம் எடுப்பதற்குப் பரிவர்த்தனை கட்டணம் விதிக்கப்படும்; மேலும், பரிவர்த்தனை செய்யப்பட்ட நாளிலிருந்தே அதற்கான வட்டி கணக்கிடப்படத் தொடங்கும். நடப்புக் கட்டணங்களுக்கு தயவுசெய்து MITC-ஐ பார்க்கவும்.
- **கிடைக்கக்கூடிய கடன் வரம்பு:** இது, அட்டை கணக்கில் உள்ள மொத்த நிலுவைத் தொகையைக் கணக்கில் கொண்ட பிறகு, அட்டைதாரருக்குக் கிடைக்கக்கூடிய மீதமுள்ள கடன் அளவைக் குறிக்கிறது. கூடுதல் அட்டைதாரர்கள் முதன்மை அட்டைதாரரின் கடன் வரம்பைப் பகிர்ந்துகொள்கிறார்கள்.
- **கிடைக்கக்கூடிய ரொக்க வரம்பு:** நிலுவையில் உள்ள ரொக்கப் பண எடுப்புகளைக் கணக்கில் கொண்ட பிறகு கணக்கிடப்படும், மீதமுள்ள ரொக்க வரம்பை இது குறிக்கிறது.
- **சர்வதேச வரம்பு:** இது செயல்படுத்தப்பட்டால், 'வெல்கம் கிட்'-ல் குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேசப் பரிவர்த்தனைகளுக்கான வரம்பு இதுவாகும். இந்த அட்டையை இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பயன்படுத்தலாம்; ஆனால் நேபாளம் மற்றும்/அல்லது பூட்டானில் வெளிநாட்டுப் பணத்தை எடுப்பதற்குப் பயன்படுத்த முடியாது. மேலும், இந்தியா, நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட வணிக நிறுவனங்களில் வெளிநாட்டுப் பணம் மூலம் பணம் செலுத்த இந்த அட்டை செல்லுபடியாகாது; அதாவது, நேபாளம் அல்லது பூட்டானில் இந்த அட்டையைப் பயன்படுத்தும்போது, பரிவர்த்தனைகளுக்கான நாணயம் அந்தந்த நாடுகளின் உள்ளூர் பணமாகவோ அல்லது இந்திய ரூபாயாகவோ இருக்க வேண்டும்.
- **பல அட்டைகள்-வரம்புப் பகிர்வு (Multi Cards-Limit Sharing):** ஒன்றுக்கு மேற்பட்ட சிட்டி யூனியன் வங்கி கடன் அட்டைகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு, கடன் மற்றும் பண வரம்புகள் அனைத்து அட்டைகளுக்கும் பகிரப்படுகின்றன. ஏதேனும் ஒரு அட்டையைப் பயன்படுத்தினால், அதனுடன் இணைக்கப்பட்ட அனைத்து அட்டைகளுக்கும் கிடைக்கக்கூடிய கடன் வரம்பிலும் அது தாக்கத்தை ஏற்படுத்தும்.
- **கடன் வரம்பு மாற்றங்கள்:** சிட்டி யூனியன் வங்கி தனது உள் வழிகாட்டுதல்களின்படி கடன் வரம்புகளை மாற்றியமைக்கும் உரிமையைக் கொண்டுள்ளது. மாற்றங்கள் குறித்து அட்டைதாரர்களுக்குக் குறைந்தது ஒரு மாத கால அவகாசத்துடன் உரிய அறிவிப்பு வழங்கப்படும்.
- **RBI வழிகாட்டுதல்கள்:** அட்டைகள் இயல்பாகவே உள்நாட்டுப்

பரிவர்த்தனைகளுக்காக இயலச் செய்யப்பட்டுள்ளன, ஆனால் அட்டைதாரர் வங்கியின் வழிமுறைகள் மூலம் சர்வதேசப் பரிவர்த்தனைகள், தொடுதலில்லாப் பணம் செலுத்துதல்கள் (contactless payments) அல்லது இணையவழிப் பரிவர்த்தனைகளை இயலச் செய்யலாம் அல்லது இயலாமல் செய்யலாம். இவ்வட்டையை வழங்குதல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவை, அவ்வப்போது நடைமுறையில் உள்ள இந்திய ரிசர்வ் வங்கியின் ("RBI") விதிமுறைகள், அந்நியச் செலாவணி கட்டுப்பாடு தொடர்பான RBI-யின் விதிமுறைகள், அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம் (FEMA), FEMA-வின் கீழ் வகுக்கப்பட்ட அனைத்து விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள், வெளியிடப்பட்ட அறிவிப்புகள்/சுற்றறிக்கைகள் மற்றும் அவ்வப்போது நடைமுறையில் உள்ள தொடர்புடைய பிற சட்டங்கள் ஆகியவற்றிற்கு உட்பட்டதாக இருக்கும்.

**வட்டி வசூலிக்கப்படாத கடன் காலம்**

பரிவர்த்தனை தேதியைப் பொறுத்து, வட்டியற்ற கடன் காலம் 17 முதல் 50 நாட்கள் வரை இருக்கலாம். செலுத்த வேண்டிய கடைசி தேதிக்குள் முந்தைய மாதக் கட்டண நிலுவைத் தொகை ஏதேனும் செலுத்தப்படாவிட்டால், தற்போதைய கணக்கு அறிக்கைக்கான வட்டியற்ற கடன் காலம் இடைநிறுத்தப்படும்.

**வட்டியற்ற காலத்தைக் கணக்கிடுவதற்கான விளக்கமான உதாரணம்:**

பில்லிங் தேதி: 18th ஆகஸ்ட் | கட்டணம் செலுத்த வேண்டிய தேதி: 5th செப்டம்பர்

- ஜூலை 18 -ஆம் தேதியன்று செய்யப்பட்ட ஒரு பரிவர்த்தனை, வட்டி இல்லாக் காலம் ஜூலை 18th முதல் செப்டம்பர் 5th வரை, அதாவது 50 நாட்கள் ஆகும்.

பில்லிங் தேதி: 18th பிப்ரவரி | கட்டணம் செலுத்த வேண்டிய தேதி: 5th மார்ச்

- பிப்ரவரி 17th -ஆம் தேதியன்று செய்யப்பட்ட ஒரு பரிவர்த்தனை, வட்டி இல்லாக் காலம் பிப்ரவரி 18th முதல் மார்ச் 5th வரை, அதாவது 17 நாட்கள் ஆகும்.

இவ்வாறு, கட்டணச் சுழற்சிக்குள் பரிவர்த்தனை செய்யப்படும் தேதியைப் பொறுத்து, வட்டியற்ற கால அளவு மாறுபடும். இருப்பினும், முந்தைய மாதத்திற்கான செலுத்த வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்த வேண்டிய தேதிக்குள் முழுமையாகச் செலுத்தத் தவறினால், வட்டியற்ற கடன் கால அவகாசம் பொருந்தாது; மேலும், பரிவர்த்தனை செய்யப்பட்ட தேதியிலிருந்தே நிதிக் கட்டணங்கள் விதிக்கப்படும்.
ரொக்க முன்பணங்களுக்கு, பரிவர்த்தனை செய்யப்பட்ட தேதியிலிருந்து பணம் செலுத்தப்படும் தேதி வரை வட்டி விதிக்கப்படும்; வட்டி இல்லாத கால அவகாசம் எதுவும் பொருந்தாது.

**C. பில்லிங் மற்றும் அறிக்கைகள்**

i. கணக்கு அறிக்கை அனுப்புதல் - காலமுறை (Periodicity) மற்றும் அனுப்பும் முறை: வங்கியின் பதிவுகளின்படி, அட்டைதாரரின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு மாதாந்திரக் கணக்கு அறிக்கைகள் (மின்னணு அறிக்கைகள்) அனுப்பப்படும். கணக்கு அறிக்கை (Account Statement), முந்தைய மாதத்தில்(களில்) மேற்கொள்ளப்பட்ட அனைத்து அட்டைப் பரிவர்த்தனைகளையும், அத்துடன் முந்தைய அறிக்கைக்கும் தற்போதைய அறிக்கைக்கும் இடைப்பட்ட காலத்தில் அட்டை கணக்கில் பதிவு செய்யப்பட்ட பரிவர்த்தனைகளையும் விவரிக்கிறது.

ii. குறைந்த பாக்கித் தொகை (Minimum Amount Due (MAD)): அட்டைதாரர்கள் குறைந்தபட்ச பாக்கித் தொகையை மட்டும் செலுத்தத் தேர்வுசெய்யலாம். மொத்த பாக்கித் தொகை (total amount due) அல்லது MAD கடைசி நிலுவைத் தேதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்.

iii. பில்லிங் சம்பந்தமான தகராறுகள்: அட்டைதாரர்கள், கணக்கு விவர அறிக்கையைப் பெற்ற 7 நாட்களுக்குள் ஏதேனும் முரண்பாடுகள் இருப்பின், அது குறித்து சிட்டி யூனியன் வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும்.

iv. பேமண்ட் ஒதுக்கீடு (Payment Allocation): பேமண்ட்கள் பின்வரும் வரிசையில் ஒதுக்கப்படும்:

   a) சரக்கு மற்றும் சேவை வரி (GST)
   b) கட்டணங்கள்
   c) வட்டி கட்டணங்கள்
   d) ஈஎம்ஐ (ஈக்குவேட்டட் மன்த்லி இன்ஸ்டால்மென்ட்ஸ்)
   e) கொள்முதல்கள் ரொக்க முன்பணங்கள்

V. தோல்வியடைந்த பேமண்ட்கள்: பேமண்ட்கள் தோல்வியடைந்தால், சிட்டி யூனியன் வங்கி கடன் அட்டையை இடைநிறுத்தம் செய்யலாம் அல்லது திரும்பப் பெறலாம் மற்றும் அதற்கான கட்டணங்களை விதிக்கலாம்.

VI. டூப்ளிகேட் அறிக்கைகள்: கட்டணம் செலுத்தி அட்டைதாரர்கள் ஒரு டூப்ளிகேட் அறிக்கையைக் கோரலாம்.

VII. சாலரிசே கடன் அட்டை தவிர மற்ற கடன் அட்டைகளுக்கு பணம் செலுத்தும் முறைகள்: உங்கள் கடன் அட்டை கணக்கிற்குப் பணம் செலுத்துவதற்குப் பின்வரும் வழிகளைப் பயன்படுத்தலாம்:

   a) CUB-இன் இணைய வங்கிச் சேவை அல்லது மொபைல் செயலி மூலம் கணக்கில் பணம் அனுப்புவது.
   b) கடன் அட்டை போர்ட்டல் வழியாக: https://creditcard.cub.bank.in/cubcredportal/cub
   c) நேரடி பேமண்ட் போர்ட்டலைப் பயன்படுத்தி:https://creditcard.cub.bank.in/cubcredportal/tz/payments.jsp?cz=cub
   d) அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கட்டணச் செயலிகள் வாயிலாக, பாரத் பில் பேமெண்ட் சிஸ்டம் (BBPS) வழியாக

VIII. சாலரிசே கடன் அட்டை க்கான பணம் செலுத்தும் முறைகள்:

   a) சாலரிசே செயலி வாயிலாக
   b) அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கட்டணச் செயலிகள் வாயிலாக, பாரத் பில் பேமெண்ட் சிஸ்டம் (BBPS) வழியாக

முறையான எச்சரிக்கையுடன் செயல்படுமாறும், எங்களால் அங்கீகரிக்கப்பட்ட முறைகளைத் தவிர வேறு வழிகளில் பணம் செலுத்துவதைத் தவிர்க்குமாறும் உங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. அத்தகைய ஏதேனும் முறையில் பணம் செலுத்தப்பட்டால், அதற்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது.

**குறிப்பு**: பொருந்தக்கூடிய வட்டி, கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்களைத் தவிர்க்க, அட்டைதாரர்கள் நிலுவையில் உள்ள முழுத் தொகையையும் (தசமப் பகுதி உட்பட) செலுத்த வேண்டிய தேதிக்குள்ளாகவோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும்.

## 1. வட்டி கணக்கீட்டுக்கான உதாரணம்

கணக்கு அறிக்கை சுழற்சி விவரங்கள்

- கணக்கு அறிக்கை சுழற்சி: ஒரு மாதத்தின் 23 முதல் அடுத்த மாதத்தின் 22-ஆம் தேதிவரை
- கணக்கு அறிக்கை தயாரிக்கப்பட்ட நாள்: ஒவ்வொரு மாதத்தின் 23-ஆம் தேதி
- எடுத்துக்காட்டு கணக்கீட்டிற்குப் பயன்படுத்தப்படும் வட்டி விகிதம் மாதத்திற்கு 3.5%

**விளக்கம்**

| வகை | பரிவர்த்தனை தேதி | தொகை |
|---|---|---|
| கடையில் பொருட்களை வாங்குவது | 14 ஜனவரி 2025 | 10000 |
| பேமண்ட் பெறப்பட்டது | 10 பிப்ரவரி 2025 | 7000 |

| வகை | பரிவர்த்தனை தேதி | நிலுவைத் தொகை | எந்த தேதி வரை | நாட்கள் | வட்டி விகிதம் | வட்டி |
|---|---|---|---|---|---|---|
| கடையில் பொருட்களை வாங்குவது | 14- ஜனவரி - 25 | 10000 | 22- ஜனவரி - 25 | 9 | மாதத்திற்கு 3.50% | 105 |
| 23/ ஜனவரி /2025 அன்று தொடக்க இருப்பு | | 10000 | 09- பிப்ரவரி - 25 | 18 | மாதத்திற்கு 3.50% | 210 |
| 10/ பிப்ரவரி/2025 அன்று ரூ. 7000 பேமண்ட் | 10- பிப்ரவரி - 25 | 3000 | 22- பிப்ரவரி - 25 | 13 | மாதத்திற்கு 3.50% | 45.5 |
| | | | | | மொத்தம் | 360.5 |

மேலே உள்ள விளக்கம் வட்டி கணக்கிடும் முறையை விளக்குவதற்காக அளிக்கப்பட்ட ஒரு உதாரண கணக்கீடு என்பதையும், இது மாதத்திற்கு 3.50% என்ற அனுமானிக்கப்பட்ட வட்டி விகிதத்தின் அடிப்படையில் அமைந்தது என்பதையும் தயவுசெய்து கவனிக்கவும். அட்டைதாரரின் தற்போதைய நிலுவைத் தொகையின் மீது வட்டி தினசரி அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. செலுத்த வேண்டிய மொத்தத் தொகை, அதற்கான காலக்கெடுவுக்குள் முழுமையாகச் செலுத்தப்படாத பட்சத்தில் வட்டி விதிக்கப்படும். பண முன்பணங்கள் (cash advances) மீதும், பரிவர்த்தனை செய்யப்பட்ட தேதியிலிருந்து பணம் செலுத்தப்படும் தேதி வரை வட்டி விதிக்கப்படும். அட்டைதாரருக்குப் பொருந்தக்கூடிய வட்டி விகிதமானது,

அந்தந்த கிரெடிட் கார்டு தயாரிப்புக்குக் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும். பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வங்கி அவ்வப்போது வட்டி விகிதத்தை மாற்றியமைக்கலாம்.

## 2. குறைந்தபட்ச நிலுவைத் தொகை (MAD) கணக்கிடப்படும் முறை

MAD கணக்கீட்டு முறை:

- அனைத்து கொள்முதல்கள் மற்றும் ரொக்கப் பணமெடுப்புகளின் கூட்டுத்தொகையில் 5%
- அனைத்து வட்டி/நிதிச் செலவுகள், கட்டணங்கள் மற்றும் வரிகள் ஆகியவற்றில் 100%

உதாரணம்:

- ₹5,000-க்கு கொள்முதல்: MAD பங்களிப்பு ₹250 (₹5,000-ல் 5%)
- சேர்ப்புக் கட்டணம் ₹1000: MAD-ல் முழுவதும் சேர்க்கப்பட்டது
- சேர்ப்புக் கட்டணத்திற்கான ஜிஎஸ்டி (₹180): MAD-ல் முழுவதும் சேர்க்கப்பட்டது
- ரொக்கமாக எடுக்கப்பட்டது ₹2,000: MAD-ல் ₹100 (₹2,000-ல் 5%) சேர்க்கப்படுகிறது
- ரொக்கம் எடுப்பதற்கான கட்டண ₹500 மற்றும் ₹90 ஜிஎஸ்டி: முழுவதும் சேர்க்கப்பட்டது
- ரொக்கமாக எடுப்பதற்கு ₹35.99 வட்டி மற்றும் ₹6.48 ஜிஎஸ்டி : முழுவதும் சேர்க்கப்பட்டது
- மொத்த நிலுவை: ₹8,812.47
- MAD: ₹2,162.47

**குறிப்பு**: மேலே உள்ள உதாரணம், செலுத்த வேண்டிய குறைந்தபட்சத் தொகையை (MAD) கணக்கிடுவதை விளக்குவதற்காக மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதில் கருதப்படும் கட்டணங்கள், வட்டி மற்றும் வரிகள் ஆகியவை தோராயமானவையே. மேலும், பொருந்தக்கூடிய கிரெடிட் கார்டு தயாரிப்பு, பரிவர்த்தனை வகை மற்றும் நடைமுறையில் உள்ள கட்டண அட்டவணை ஆகியவற்றைப் பொறுத்து இவை மாறுபடலாம். உண்மையான MAD ஆனது, அட்டைதாரரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகைகளின் அடிப்படையில் கணக்கிடப்படும்.

ஒவ்வொரு மாதமும் செலுத்த வேண்டிய குறைந்தபட்சத் தொகையை (MAD) மட்டும் செலுத்துவது, திருப்பிச் செலுத்தும் காலத்தை பல ஆண்டுகளாக நீட்டித்து, அதன் விளைவாக வட்டி விதிக்கப்படுவதற்கு வழிவகுக்கும்.

கடன் அட்டைதாரர் கட்டணம் செலுத்த வேண்டிய தேதிக்குள் குறைந்தபட்சமாக செலுத்த வேண்டிய தொகையை (Minimum Amount Due – MAD) செலுத்தத் தவறினால், நிலுவையில் உள்ள தொகையை வசூலிப்பதற்காக, சிட்டி யூனியன் வங்கி எந்தவொரு கூடுதல் அறிவிப்பும் வழங்காமல், அட்டைதாரரின் அதே வாடிக்கையாளர் அடையாள எண்ணின் (Customer ID) கீழ் இணைக்கப்பட்டுள்ள சேமிப்பு கணக்கு அல்லது நடப்புக் கணக்கின் மீது உரிமைத் தக்கவைப்பு (Lien) பதிவு செய்வதற்கும் மற்றும்/அல்லது அத்தகைய சேமிப்பு கணக்கு அல்லது நடப்புக் கணக்கிலிருந்து தொகையைப் பற்று வைப்பதற்கும் (Debit) மற்றும்/அல்லது

வங்கியில் கார்டுதாரரால் வைத்திருக்கும் ஏதேனும் வைப்பு, கணக்கு இருப்பு அல்லது பிற தொகைகளின் மீது, பொருந்தும் வகையில், வங்கியின் உரிமைத் தக்கவைப்பு (Lien) உரிமையைப் பயன்படுத்துவதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

## D. கடன் கட்டத் தவறுதல்

கட்டணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் (அதாவது, நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்சத் தொகையை உரிய தேதிக்குள் செலுத்தாதது அல்லது இந்த ஒப்பந்தத்தின் ஏதேனும் ஒரு விதிமுறையை மீறுவது), சிட்டி யூனியன் வங்கி அட்டைதாரருக்கு அவ்வப்போது அஞ்சல், தொலைநகல், தொலைபேசி, மின்னஞ்சல், குறுஞ்செய்தி (SMS) மற்றும்/அல்லது நிலுவைத் தொகையை வசூலிக்க நியமிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினர் மூலமாக நினைவூட்டல்களை அனுப்பும். இவ்வாறு நியமிக்கப்படும் எந்தவொரு மூன்றாம் தரப்பினரும், இந்திய வங்கிகள் சங்கத்தின் (IBA) கடன் வசூல் நடைமுறை விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

சிட்டி யூனியன் வங்கி, பணம் செலுத்த வேண்டிய தேதியிலிருந்து 3 நாட்கள் அவகாசத்தை அனுமதிக்கிறது; இக்காலகட்டத்தில் செலுத்தப்படும் தொகைகள் நிலுவையில் உள்ளவையாகக் கருதப்படாது. பணம் செலுத்துதல் தொடர்பான நடைமுறைகளுக்குத் தேவைப்படும் கால அவகாசத்தைக் கருத்தில் கொண்டு இந்த வசதி வழங்கப்படுகிறது; இருப்பினும், கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் செலுத்த வேண்டிய தேதிக்குள் அட்டைதாரர் தங்களது நிலுவைத் தொகையைச் செலுத்த வேண்டும்.

அட்டை கணக்கு 3 நாட்களுக்கு மேல் 'காலாவதியான நிலுவையில்' (past due) இருக்கும்போது, சிட்டி யூனியன் வங்கி அக்கணக்கை கடன் தகவல் நிறுவனங்களுக்கு (CICs) 'காலாவதியான நிலுவை' எனத் தெரிவிப்பதோடு, தாமதக் கட்டணங்களையும் விதிக்கும். இருப்பினும், 'காலாவதியான நாட்களின்' (days past due) எண்ணிக்கை மற்றும் தாமதக் கட்டணங்கள் ஆகியவை கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 'செலுத்த வேண்டிய தேதியிலிருந்து' (Payment Due Date) கணக்கிடப்படும்.

கடன் அட்டை வைத்திருப்பவர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை செலுத்தத் தவறினால், சிட்டி யூனியன் வங்கி தனது முழுமையான விருப்பத்தின் பேரில் பின்வருவனவற்றைச் செய்ய உரிமை பெறும்:

a) அட்டைதாரருக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து கடன் அட்டை வசதிகளையும் திரும்பப் பெறலாம்.
b) அட்டைதாரரிடம், தங்கள் அட்டையின்மீது நிலுவையில் உள்ள அனைத்துத் தொகையையும் உடனடியாகச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளலாம்.
c) வங்கியிடம் உள்ள அட்டைதாரருக்குச் சொந்தமான எந்தவொரு கணக்கிலும் மற்றும் அவர்களது கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள அனைத்துப் பணத்தின் மீதும், அல்லது வங்கியின் வசம் அல்லது பாதுகாப்பில் உள்ள அத்தகைய பணத்தின் மீதும், எப்போது வேண்டுமானாலும் மற்றும் முன்னறிவிப்பு இன்றியும், வங்கிக்கு 'பற்றுரிமை' (lien) மற்றும் 'ஈடுசெய்து சரிசெய்யும் உரிமை' (right of set-off) இருக்கும் என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. வங்கி கோரும் பட்சத்தில், அட்டை கணக்கில் (Card Account) நிலுவையில் உள்ள தொகை குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பிச்

செலுத்தப்படாவிட்டால், பின்வரும் சொத்துக்கள் அல்லது இருப்புகள் அட்டைதாரரின் நிலுவைத் தொகையை ஈடுசெய்யப் பயன்படுத்தப்படலாம்: நிலையான வைப்புத்தொகைக் கணக்குகள் (fixed deposit accounts) உள்ளிட்ட எந்தவொரு கணக்கிலும் உள்ள வரவுத் தொகை; மற்றும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக அல்லது வேறு காரணங்களுக்காக வங்கியின் வசம் அல்லது பாதுகாப்பில் உள்ள அட்டைதாரரின் சொத்துக்கள் (எ.கா. 'டெபாசிட்டரி பார்ட்டிசிபண்ட்' - Depository Participant - என்ற முறையில் வங்கியிடம் உள்ள அட்டைதாரரின் டிமேட் பங்குகள் அல்லது பிற பத்திரங்கள்). ஏதேனும் பற்றாக்குறை இருந்தால், அட்டைதாரரிடமிருந்து பற்றாக்குறைத் தொகையானது வங்கியினால் மீட்கப்படலாம்.

கடன் கட்டத் தவறுதல் (default) நிகழும் பட்சத்தில், சிட்டி யூனியன் வங்கி அதுகுறித்த அறிக்கையை கடன் தகவல் முகமைகளுக்கோ அல்லது சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட பிற முகமைகளுக்கோ அனுப்பலாம். கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பேமண்ட் செலுத்த வேண்டிய தேதிக்கும் பில்லிங் தேதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதி, அட்டைதாரர் ஒருவரை நிலுவைத் தொகை செலுத்தாதவராகப் (defaulter) புகாரளிப்பதற்கான அறிவிப்புக் காலமாக கருதப்படுகிறது.

நிலுவைத் தொகையைச் செலுத்திய பிறகு, தவறுதல் குறித்த அறிக்கையை (default report) திரும்பப் பெறுவதற்கான நடைமுறை மற்றும் அதற்கான கால அவகாசம் ஆகியவை பின்வருமாறு:

- • சிட்டி யூனியன் வங்கி, ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின்படி, CIBIL (கிரெடிட் இன்ஃபர்மேஷன் பியூரோ (இந்தியா) லிமிடெட்) நிர்ணயித்துள்ள வடிவத்தில், அட்டைதாரரின் விவரங்களை CIBIL-க்கு சமர்ப்பிக்கிறது. இத்தரவு, கடந்த மாதத்திற்கான அனைத்து அட்டைதாரர்களின் (நிலுவை வைத்திருப்பவர்கள் மற்றும் தற்போதைய அட்டைதாரர்கள்) திருப்பிச் செலுத்தும் நிலையையும் உள்ளடக்கியது. சமர்ப்பிக்கப்பட்ட தரவை CIBIL அடுத்த 30 நாட்களுக்குள் தனது சர்வரில் பதிவேற்றுகிறது.
- ஒரு அட்டைதாரர் சமரசத் தீர்வைத் தேர்வுசெய்தாலோ அல்லது கணக்கு தள்ளுபடி செய்யப்பட்டாலோ, CIC-கள் முறையே தீர்க்கப்பட்டது மற்றும் தள்ளுபடி செய்யப்பட்டது என மேம்படுத்தப்படும்.

அட்டைதாரர் இறக்க நேரிட்டாலோ அல்லது நிரந்தரமாகச் செயலிழந்தாலோ, நிலுவையில் உள்ள முழுத் தொகையும் (பில் செய்யப்படாத பரிவர்த்தனைகள் உட்பட) உடனடியாக சிட்டி யூனியன் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டியதாகிவிடும். நிலுவைத் தொகை முழுவதையும் அட்டைதாரரின் சொத்துக்களிடமிருந்து வசூலிக்க சிட்டி யூனியன் வங்கிக்கு உரிமை உண்டு. மேலும், அத்தகைய நிலுவைத் தொகையை வசூலிப்பதில் ஏற்படும் சட்டக் கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள் உள்ளிட்ட அனைத்துச் செலவுகளிலிருந்தும் சிட்டி யூனியன் வங்கிக்கு சட்ட விலக்குரிமையை வழங்க வேண்டும். சிட்டி யூனியன் வங்கியிடம் அட்டைதாரர் பெயரில் பராமரிக்கப்படும் பணம், வைப்புத்தொகைகள் அல்லது கணக்குகளிலிருந்து நிலுவைத் தொகை முழுவதையும் திரும்பப் பெறவும் சிட்டி யூனியன் வங்கிக்கு உரிமை உண்டு.

**1. சிறப்பு குறிப்புக் கணக்கு (SMA) மற்றும் செயல்படாத சொத்து (NPA) என**

### வகைப்படுத்துதல்

ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின் விதிகளின்படி, கடன் வழங்குநர்கள் கடனை திருப்பிச் செலுத்துவதில் தவறிய உடனேயே, கடன் வாங்கியவர்களின் கணக்குகளில் ஏற்படக்கூடிய ஆரம்பக்கட்ட நிதி நெருக்கடியை அடையாளம் கண்டு, அவற்றை 'சிறப்புக் கவனத்திற்குரிய கணக்குகள்' (SMA) என வகைப்படுத்த வேண்டும். கடன்பெற்றவரின் கணக்குகளை SMA என்றும் NPA என்றும் வகைப்படுத்துவது உரிய நாளிற்காக அந்த நாளின் இறுதிப் பரிசீலினையின் ஒரு அங்கமாகச் செய்யப்படும். SMA அல்லது NPA வகைப்பாட்டு நாள் எந்த நாளுக்கான நாள் இறுதிப் பரிசீலனையோ அந்த நாட்காட்டி நாளாக இருக்கும். அதன்படி, SMA/NPA தேதியானது, அந்த நாட்காட்டி தேதியின் நாள் முடிவில் கணக்கின் சொத்து வகைப்பாடு நிலையை பிரதிபலிக்கும். கடன் அட்டை கணக்குகளைப் பொறுத்தவரை, செலுத்த வேண்டிய குறைந்தபட்சத் தொகையை (MAD) உரிய தேதிக்குள் செலுத்தாத பட்சத்தில் மட்டுமே, அவை SMA (சிறப்புக் கண்காணிப்புக்குரிய கணக்கு) என வகைப்படுத்தப்படும். அத்தகைய வகைப்பாட்டின் விளக்கம் பின்வருமாறு:

- SMA 0 - கடன் அட்டையின் நிலுவைத் தேதி மார்ச் 31,2021 ஆகவும், இந்தத் தேதியில் குறைந்தபட்ச நிலுவை தொகை (MAD) பெறப்படாவிட்டால், அந்தக் கணக்கு மார்ச் 31, 2021-ன் இறுதியில் SMA 0 ஆக இருக்கும்.
- SMA 1 - இது தொடர்ந்து காலதாமதமாக இருந்தால், தொடர்ந்து பாக்கியாக இருந்து 30 நாட்கள் முடிந்ததும் அதாவது ஏப்ரல் 30, 2021 அன்று இந்த கணக்கு SMA-1 என குறியிடப்படும்.
- SMA 2 - கணக்கு தொடர்ந்து காலதாமதமாக இருந்தால், அது மே 30, 2021 அன்று SMA-2 எனக் குறிக்கப்படும்.
- NPA - கணக்கு மேலும் காலதாமதமாக இருந்தால், அது ஜூன் 29,2021 அன்று NPA என வகைப்படுத்தப்படும்.

RBI-யின் வழிகாட்டுதல்களின்படி, கணக்குகளை NPA-வாக (வாராக் கடன்) வகைப்படுத்துவது கடன் வசதி வாரியாக அல்லாமல், கடன் பெறுபவர் வாரியாக மேற்கொள்ளப்படுகிறது. எனவே, நிலுவைத் தொகையைச் செலுத்தாத காரணத்தால் வங்கியிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் ஒரு கடன் வசதி 'செயலற்ற சொத்து' (NPA) என வகைப்படுத்தப்பட்டால், அதே வங்கியிடம் கடன் வாங்கியவரின் மற்ற அனைத்து கடன் / கடன் அட்டை கணக்குகளும் 'செயலற்ற சொத்துகளாகவே” வகைப்படுத்தப்படும். அத்தகைய கணக்குகளில் வழக்கமான முறையில் பணம் செலுத்தப்பட்டு வந்தாலும் கூட, அந்த அனைத்து கடன்கள், கடன் அட்டைகள் அல்லது கடன் வசதிகளையும் திரும்பப் பெறுவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

## E. அட்டை உறுப்பினர் தகுதியை முறித்தல் / ஒப்படைத்தல் / புதுப்பித்தல்

அட்டைதாரர் எப்போது வேண்டுமானாலும், முன்னறிவிப்புடனோ அல்லது முன் அறிவிப்பு இல்லாமலோ கடன் அட்டை கணக்கை ரத்து செய்யவோ அல்லது ஒப்படைக்கவோ செய்யலாம். தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்க, கடன் அட்டையை நான்கு துண்டுகளாக வெட்டுமாறும், அப்போது அதன் ஹாலோகிராம் மற்றும் காந்தப் பட்டை ஆகியவை அழிக்கப்படுவதை உறுதி செய்யுமாறும் அறிவுறுத்தப்படுகிறது. முழுமையான அட்டை எண்ணைக் குறிப்பிட்டு

வாடிக்கையாளர் சேவைப் பிரிவுக்குக் கடிதம் எழுதுவதன் மூலமோ அல்லது வாடிக்கையாளர் சேவை மையத்தைத் தொடர்புகொள்வதன் மூலமோ சேவையை ரத்து செய்யக் கோரலாம். அட்டை கணக்கு தொடர்பான நிலுவைத் தொகைகள் அனைத்தும் முழுமையாகச் செலுத்தப்பட்டு, சிட்டி யூனியன் வங்கி அத்தொகையைப் பெற்றவுடன், இந்தச் சேவை முறித்தல் நடவடிக்கை நடைமுறைக்கு வரும்.

திட்டம் நிறுத்தப்பட்டாலோ அல்லது புதுப்பிக்கப்பட்டாலோ, வேறு வகையான அட்டையை வழங்குவதற்கான உரிமையை சிட்டி யூனியன் வங்கிக்கு முழு உரிமை உள்ளது கடன் வரம்பு மற்றும் ரொக்க வரம்பு ஆகியவை சிட்டி யூனியன் வங்கியின் விருப்பத்திற்கு உட்பட்டவை. மூடும்போது அதன் புதுப்பித்தலின்போது அளிக்கப்பட்ட எந்த ஒரு மாற்று அட்டையும் பயன்பாட்டில் செல்லுபடியாகும்.

நிலுவையிலுள்ள கடன் கடந்தும் உள்ள தொகை செலுத்தி முடிக்கப்படும்வ்ரை அட்டைக் கணக்கு மூடப்பட்ட பின்னர் நிதிக் கட்டணங்கள் தொடர்ந்து சேர்ந்துகொண்டிருக்கும். ஒரு அட்டை ஓராண்டுக்கும் மேலாகப் பயன்பாட்டில் இல்லாமல் இருந்தால், அட்டைதாரருக்குத் தகவல் தெரிவித்த பிறகு, அந்த அட்டைக்கான கணக்கை மூடுவதற்கான உரிமை சிட்டி யூனியன் வங்கிக்கு உண்டு. குறிப்பிட்ட காலத்திற்குள் எந்தப் பதிலும் பெறப்படாவிட்டால், நிலுவைத் தொகைகள் அனைத்தும் செலுத்தப்பட்டதற்கு உட்பட்டு, சிட்டி யூனியன் வங்கி அட்டை கணக்கை (கூடுதல் அட்டைகள் உட்பட) மூடிவிடும்.

அட்டையை மூடும் நேரத்தில் ஒரு அட்டையை வைத்திருப்பவர் எதிர்மறையான ரிவார்டு பாயிண்ட் இருப்பு வைத்திருந்தால், அதற்குச் சமமான மதிப்பு கணக்கு அறிக்கையில் பற்று வைக்கப்படும் மற்றும் மற்ற நிலுவைத் தொகைகளுடன் அட்டைதாரரால் செலுத்தப்பட வேண்டும். விகிதாச்சார அடிப்படையில் எந்த ஒரு வருடாந்திர, சேர்க்கை, அல்லது புதுப்பித்தல் கட்டணங்களும் திருப்பிச்செலுத்தப்படாது.

வணிகம் அல்லது பாதுகாப்பு காரணங்களுக்காகத் தேவை என்று சிட்டி யூனியன் வங்கி நியாயமான முறையில் கருதினாலோ, அல்லது ஏதேனும் சட்ட அமலாக்க முகமை, அரசுத் தரப்பு ஆகியவற்றின் கோரிக்கையின் பேரிலோ, அல்லது வங்கி மற்றும் அதன் வாடிக்கையாளருக்குப் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின்படியோ, சிட்டி யூனியன் வங்கி எப்போது வேண்டுமானாலும் முன் அறிவிப்பு ஏதுமின்றி அட்டைதாரரர் கணக்கின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தலாம், நிறுத்தலாம் அல்லது இடைநிறுத்தலாம்.

அட்டைதாரர் இறப்பதோ அல்லது அட்டைதாரராக உள்ள ஒரு கார்ப்பரேட் அமைப்பு திவாலானாலோ, கலைக்கப்பட்டாலோ அல்லது மூடப்பட்டாலோ, அந்த அட்டைதாரருக்கும் அவருடன் இணைக்கப்பட்ட கூடுதல் அட்டைதாரர்களுக்கும் (Add-on cardholders) வழங்கப்பட்ட அட்டைகள் தானாகவே ரத்து செய்யப்படும். அட்டைதாரரின் இறப்பு, திவால் நிலை, நொடிப்பு நிலை, நிறுவனம் கலைக்கப்படுதல் அல்லது அரசு அல்லது ஒழுங்குமுறை அமைப்புகளிடமிருந்து பெறப்படும் உத்தரவு ஆகியவற்றில் எது நிகழ்ந்தாலும், அட்டை கணக்கில் நிலுவையில் உள்ள அனைத்துத் தொகைகளும் உடனடியாகச் செலுத்தப்பட வேண்டியவையாகக் கருதப்படும்; நிலுவைத் தொகைகள் அனைத்தையும் உடனடியாகச் செலுத்த வேண்டிய அட்டைதாரரின் கடமைக்கு எவ்விதப் பாதிப்பும்

ஏற்படாத வகையில், நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு இணங்க அத்தொகையை வசூலிக்க சிட்டி யூனியன் வங்கிக்கு உரிமை உண்டு.

ஒரு கார்ப்பரேட் நிறுவனம் கலைப்பு அல்லது செயல்பாட்டை நிறுத்துவதற்கான நடைமுறைகளுக்கு உட்பட்டாலோ, அல்லது அந்த நிறுவனத்திற்கு கிரெடிட் கார்டுகளை வழங்குவதிலிருந்து வங்கியை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தடை செய்யும் வகையில் அரசு அல்லது ஒழுங்குமுறை அமைப்பால் பிறப்பிக்கப்பட்ட ஏதேனும் உத்தரவு அமலில் இருந்தாலோ, அந்நிறுவனத்தின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து கார்ப்பரேட் கார்டுகளும் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும். அத்தகைய ரத்துசெய்தலால் எழும் எந்தவொரு உரிமைக்கோரிக்கைக்கும் சிட்டி யூனியன் வங்கி பொறுப்பேற்காது. அனைத்து அட்டைகளும் நிர்ணயிக்கப்பட்ட முறையில் அழிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டும்; அத்துடன், அந்த அட்டைகள் மீதான நிலுவைத் தொகைகள் அனைத்தும் உடனடியாகச் செலுத்தப்பட வேண்டியவையாகும்.

## F. அட்டைகள் தொலைந்து போவது / திருடு போவது / தவறாகப் பயன்படுத்துவது

அட்டை தொலைந்துவிட்டாலோ, திருடப்பட்டாலோ அல்லது சேதமடைந்தாலோ, அல்லது PIN எண் அல்லது பிற பாதுகாப்புத் தகவல்கள் வேறொருவருக்குத் தெரிந்திருந்தாலோ, அல்லது அட்டை அனுமதியின்றிப் பயன்படுத்தப்பட்டாலோ, அட்டைதாரர்கள் உடனடியாக சிட்டி யூனியன் வங்கியின் 1800 120 5000 (IVR) எண்ணிலோ அல்லது அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளைப் புகாரளிப்பதற்கான பிற வழிகள் மூலமாகவோ வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். அருகிலுள்ள காவல் நிலையத்தில் காவல் புகார் அல்லது முதல் தகவல் அறிக்கை (FIR) அளிக்கப்பட வேண்டும்; அதன் நகல் ஒன்றை சிட்டி யூனியன் வங்கியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

அட்டைதாரர் IVR அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது தொலைபேசி வங்கிச்

- சேவை எண் / கிரெடிட் கார்டு உதவி எண்: 1800 120 5000 (கட்டணமில்லா எண்) / 044 7122 5000 வழியாகவோ அட்டையை உடனடியாக முடக்கலாம்.
- மின்னஞ்சல் முகவரி: creditcardsupport@cityunionbank.in

உங்கள் கடன் அட்டை கணக்கின் மொபைல் எண் உள்ளிட்ட தொடர்பு விவரங்களில் செய்யப்படும் மாற்றங்களின் அடிப்படையில், கணினியில் உள்ள உங்கள் புதிய மற்றும் முந்தைய தொடர்பு விவரங்கள் ஆகிய இரண்டிற்கும் தெரிவிக்கப்படும். கைப்பேசி எண் உள்ளிட்ட உங்களுடைய தற்போதைய தொடர்பு விவரங்களை எமது பதிவுகளில் புதுப்பித்து வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

அட்டை தவறாகப் பயன்படுத்தப்படும் பட்சத்தில், காப்பீட்டுத் திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தொலைந்துபோன / திருடப்பட்ட அட்டைக்கான காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள தொகைக்கு மட்டுமே சிட்டி யூனியன் வங்கியின் கடப்பாடு இருக்கும். ஏடிஎம் பரிவர்த்தனைகள் அல்லது

PIN / கடவுச் சொல் / OTP / mPIN / CVV ஆகியவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகள் தொடர்பாக, அட்டைதாரர் மோசடியாகவோ, போதிய கவனமின்றியோ செயல்பட்டாலோ அல்லது அட்டையைத் தவறாகப் பயன்படுத்தினாலோ, அதற்கு அவரே முழுப் பொறுப்பாவார்.

அட்டை தொலைந்துபோன நிலையில் அது குறித்து வங்கிக்குத் தெரிவிக்காதிருந்தாலோ அல்லது வங்கிக்குத் தெரிவிப்பதற்கு முன்பே அது தவறாகப் பயன்படுத்தப்பட்டாலோ, அத்தகைய இழப்பு அல்லது தவறான பயன்பாட்டினால் ஏற்படக்கூடிய எந்தவொரு கடப்பாடு (சிவில் அல்லது குற்றவியல்), இழப்பு, செலவு அல்லது சேதத்திலிருந்தும் சிட்டி யூனியன் வங்கிக்கு (City Union Bank) அட்டைதாரர் முழுமையாக விலக்குரிமை அளிக்கிறார்.

## G. குறை தீர்ப்பு மற்றும் இழப்பீட்டுக் கட்டமைப்பு

### i. குறை தீர்ப்பு மற்றும் மேல்முறையீட்டு (Escalation) நடைமுறை

**முதல் நிலை தொடர்பு வழிகள்**: கேள்விகள் / கருத்துகள் / புகார்கள்

கிரெடிட் கார்டு தொடர்பான ஏதேனும் கேள்விகள், கோரிக்கைகள், கருத்துகள் அல்லது புகார்களுக்கு, அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளைப் புகாரளித்தல், கிரெடிட் கார்டு தொலைந்தது / திருடப்பட்டது / தவறாகப் பயன்படுத்தப்பட்டது என்பதைத் தெரிவித்தல் உள்ளிட்டவற்றிற்காக, கார்டுதாரர் சிட்டி யூனியன் வங்கி-ஐ பின்வரும் வழிகளில் தொடர்பு கொள்ளலாம்:

- எங்களைத் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளவும்
- வங்கி கிளைக்கு நேரில் வருகை தரவும்
- எழுத்துப்பூர்வமாக தொடர்புகொள்ளவும்
- மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்
- அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளைப் புகாரளிக்கவும்
- கிரெடிட் கார்டை முடக்க / மீண்டும் செயல்படுத்த கோரவும்
- கிரெடிட் கார்டை மூட / ஒப்படைக்க (Surrender) கோரவும்
- கிரெடிட் கார்டு தொடர்பான புகார்களைப் பதிவு செய்யவும்

**வாடிக்கையாளர் சேவை**

- தொலைபேசி: 1800 120 5000 (கட்டணமில்லா) / 044 7122 5000
- மின்னஞ்சல்: creditcardsupport@cityunionbank.in
- அஞ்சல் முகவரி: சிட்டி யூனியன் பேங்க் லிமிடெட்
  கிரெடிட் கார்டு பிரிவு,
  புதிய எண் 6, பழைய எண் 26,
  மோகன்புரி 5-வது தெரு,
  ஆதம்பாக்கம், சென்னை – 600088**.**

### இரண்டாம் நிலை தொடர்பு வழி

மேற்கண்ட வழிகளில் அளிக்கப்பட்ட புகாருக்கு கார்டுதாரருக்கு திருப்திகரமான தீர்வு கிடைக்கவில்லை எனில், அந்தப் புகாரை குறைதீர் பிரிவிற்கு (Grievance Redressal Cell) மேல்முறையீடு செய்யலாம்.

- மின்னஞ்சல்: complaints_grievances@cityunionbank.in
- அஞ்சல் முகவரி:
  சிட்டி யூனியன் பேங்க் லிமிடெட்,
  எண்.24 B, காந்தி நகர்,
  கும்பகோணம் – 612001

### மூன்றாம் நிலை தொடர்பு வழி

இரண்டாம் நிலையில் பெறப்பட்ட பதிலில் கார்டுதாரர் திருப்தியடையவில்லை எனில், அந்த விவகாரம் முதன்மை நோடல் அலுவலரிடம் (Principal Nodal Officer) மேல்முறையீடு செய்யப்படலாம்.

முதன்மை நோடல் அலுவலர்: திரு. ஜி. சதீஷ்குமார்
பொது மேலாளர் – வாடிக்கையாளர் அனுபவத் துறை

- தொலைபேசி: 044 7122 5000 / 1800 120 5000 (கட்டணமில்லா)
- மின்னஞ்சல்: complaints_grievances@cityunionbank.in
- அஞ்சல் முகவரி:
  சிட்டி யூனியன் பேங்க் லிமிடெட்,
  எண்.24 B, காந்தி நகர்,
  கும்பகோணம் – 612001

### ii. புகார்களைத் தீர்ப்பதற்கான காலவரம்பு

வாடிக்கையாளர்களின் புகார்கள் 30 நாட்களுக்குள் தீர்க்கப்படும்.

புகார் தீர்க்கப்படாமல் இருந்தாலோ அல்லது புகார் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் கார்டுதாரருக்கு பதில் கிடைக்காவிட்டாலோ, நடைமுறையில் உள்ள திட்டத்தின் பொருந்தக்கூடிய விதிமுறைகளின்படி கார்டுதாரர் இந்திய ரிசர்வ் வங்கி – ஒருங்கிணைந்த குறைதீர் அதிகாரியை (Reserve Bank – Integrated Ombudsman) அணுகலாம்.

மேலும் விவரங்களுக்கு, வங்கியின் இணையதளத்தில் பார்க்கவும்:
https://www.cityunionbank.com/ombudsman-scheme

### iii. வெற்றியடையாத / தோல்வியடைந்த பரிவர்த்தனைகள், குறைதீர்

**நடவடிக்கையில் தாமதம், கிரெடிட் கார்டை மூடுவதில் தாமதம், தொலைந்த / திருடப்பட்ட கார்டுகளை முடக்குவதில் தாமதம் போன்றவற்றிற்கான இழப்பீட்டு நடைமுறை**

வெற்றியடையாத அல்லது தோல்வியடைந்த பரிவர்த்தனைகள், தற்காலிகமாகத் தடுக்கப்பட்ட தொகையை மீளப் பதிவு செய்தல் (Reversal), பணத்தைத் திருப்பிச் செலுத்துதல் (Refund) மற்றும் பொருந்தக்கூடிய பிற இழப்பீடுகள் தொடர்பாக, வங்கி அவ்வப்போது நடைமுறையில் இருக்கும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள், கார்டு நெட்வொர்க் விதிமுறைகள் மற்றும் வங்கியின் இழப்பீட்டுக் கொள்கை (Compensation Policy) ஆகியவற்றின்படி நடவடிக்கை எடுக்கும்.

கார்டுதாரரால் தவறானது அல்லது அங்கீகரிக்கப்படாதது எனப் புகாரளிக்கப்பட்டு, வணிக நிறுவனத்திடமிருந்து (Merchant Establishment) விளக்கம் அல்லது சரிபார்ப்பு தேவைப்படும் பரிவர்த்தனைகள், பொருந்தக்கூடிய கார்டு நெட்வொர்க் விதிமுறைகள் மற்றும் வங்கியின் தகராறு தீர்வு நடைமுறையின்படி கையாளப்படும்.

பரிந்துரைக்கப்பட்ட ஒழுங்குமுறை மற்றும் செயல்பாட்டு காலவரம்புகளின்படி, வங்கி கார்டுதாரருக்கு தேவையான விளக்கத்தையும், பொருந்தும் இடங்களில், தொடர்புடைய ஆதாரத் தகவல்களையும் வழங்கும்.

பொருந்தக்கூடிய ஒழுங்குமுறை காலவரம்பை மீறி கிரெடிட் கார்டை மூடுவதில் தாமதம் ஏற்பட்டால், நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின்படி இழப்பீடு வழங்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால், இத்தகைய தாமதத்திற்காக ஒரு நாளுக்கு ₹500 என்ற விகிதத்தில், கிரெடிட் கார்டு மூடப்படும் வரை இழப்பீடு வழங்கப்படும்; இருப்பினும், கிரெடிட் கார்டு கணக்கில் நிலுவைத் தொகை எதுவும் இருக்கக்கூடாது.

இழப்பீடு தொடர்பான பொருந்தக்கூடிய காலவரம்புகள் மற்றும் விதிமுறைகள், வங்கியின் இழப்பீட்டுக் கொள்கை மற்றும் அந்நேரத்தில் நடைமுறையில் இருக்கும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களால் நிர்ணயிக்கப்படும்.

**iv. கார்டு வழங்குநரின் தொடர்பு விவரங்கள் – அழைப்பு மையம், மின்னஞ்சல், உதவி எண் மற்றும் பிற முக்கிய தொடர்பு விவரங்கள்**

கார்டுதாரர் சிட்டி யூனியன் வங்கியின் கிரெடிட் கார்டு தொடர்பான விஷயங்களுக்கு பின்வரும் வழிகளில் தொடர்புகொள்ளலாம்:

- கிரெடிட் கார்டு உதவி எண்: 1800 120 5000 (கட்டணமில்லா)
- IVRS / தொடர்பு எண்: 044 7122 5000
- மின்னஞ்சல்: creditcardsupport@cityunionbank.in

**கிரெடிட் கார்டை மூடுதல் / ஒப்படைத்தல்**

- மின்னஞ்சல்: creditcardsupport@cityunionbank.in
- கட்டணமில்லா தொலைபேசி: 1800 120 5000
- IVRS: 044 7122 5000

வாடிக்கையாளரிடமிருந்து மேற்கூறியுள்ள ஏதேனும் வழிமுறைகள் மூலம் பெறப்படும் அட்டை மூடல் கோரிக்கைகள், நிலுவையில் உள்ள அனைத்து தொகைகளும் செலுத்தப்பட்டிருப்பதற்கு உட்பட்டு, கோரிக்கை பெறப்பட்ட தேதியிலிருந்து 7 வேலை நாட்களுக்குள் செயல்படுத்தப்படும். அட்டை மூடல் கோரிக்கை என்பது மேற்கூறிய வழிமுறைகளின் மூலம் பெறப்படும் கோரிக்கைகளுக்கு மட்டுமே பொருந்தும்; வேறு எந்த வழிமுறையின் மூலமாகவும் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகளுக்கு இது பொருந்தாது

**கிரெடிட் கார்டு தொலைதல் / திருட்டு / தவறான பயன்பாடு குறித்து புகாரளித்தல்**

கிரெடிட் கார்டு தொலைந்தாலோ, திருடப்பட்டாலோ அல்லது தவறாகப் பயன்படுத்தப்பட்டாலோ, கார்டுதாரர் உடனடியாக பின்வரும் வழிகளில் வங்கியைத் தொடர்புகொள்ள வேண்டும்:

- கிரெடிட் கார்டு உதவி எண்: 1800 120 5000 (கட்டணமில்லா) / 044 7122 5000
- மின்னஞ்சல்: creditcardsupport@cityunionbank.in

**கிரெடிட் கார்டு தொலைதல், திருட்டு அல்லது தவறான பயன்பாடு தொடர்பான கடிதப் பரிமாற்றங்களுக்கு:**

சிட்டி யூனியன் பேங்க் லிமிடெட்
கிரெடிட் கார்டு பிரிவு,
புதிய எண் 6, பழைய எண் 26,
மோகன்புரி 5-வது தெரு,
ஆதம்பாக்கம்,
சென்னை – 600088.

## H. வெளிப்படுத்துதல்

சிட்டி யூனியன் வங்கி, ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட கிரெடிட் ப்யூரோக்களுடன் இணைந்திருக்கலாம் மற்றும் உங்கள் தற்போதைய இருப்பு, பணம் செலுத்திய வரலாறு, மக்கள்தொகை விவரங்கள் போன்றவை உட்பட, ஆனால் அவை மட்டும் அல்லாமல் கடன் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளலாம். கடன் வழங்கப்பட வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது குறித்து கடன் தகவல் நிறுவனங்கள் எந்தவொரு கருத்துரையையோ, குறிப்பையோ அல்லது விமர்சனத்தையோ வழங்குவதில்லை. தேவையான நிலுவைத் தொகைகளை உரிய நேரத்தில் செலுத்தி, நல்லதொரு கடன் வரலாற்றைப் பராமரிப்பது

உங்களுக்கு உகந்தது. கடன் தகவல் நிறுவனங்கள் செயல்பாட்டில் இருப்பதால், பொறுப்பான வாடிக்கையாளர்கள் கடன் வழங்குநர்களிடமிருந்து சிறந்த நிபந்தனைகளுடன் கூடிய விரைவான மற்றும் போட்டிமிக்க சேவைகளை எதிர்பார்க்கலாம். வாடிக்கையாளர்கள் கடன் தவணையைச் செலுத்தத் தவறினால் அந்த விவரம் கடன் தகவல் நிறுவனங்களிடம் பதிவாகும்; இது எதிர்காலத் தேவைகளுக்கான உங்கள் கடன் தகுதியைப் பாதிக்கும். சிட்டி யூனியன் வங்கி, வாடிக்கையாளர் தகவல்களை மாதந்தோறும் அல்லது வங்கியும் கடன் தகவல் நிறுவனங்களும் ஒப்புக்கொள்ளும் வேறு ஏதேனும் கால இடைவெளியில் அந்த நிறுவனங்களுக்கு வழங்கும். சிட்டி யூனியன் வங்கியிடம் கட்டணம் தொடர்பான ஏதேனும் சர்ச்சை குறித்துத் தெரிவிக்கப்படும் பட்சத்தில், அந்தச் சர்ச்சை தீர்க்கப்படும் வரை கடன் தகவல் நிறுவனங்களுக்குத் தகவல் அளிப்பதை வங்கி நிறுத்தி வைக்கும்.

அட்டைதாரர்/கூடுதல் அட்டைதாரர்(கள்) தொடர்பான தகவல்களை — இதில் அட்டைதாரர் தனது கடமைகளை நிறைவேற்றுவதில் செய்யும் ஏதேனும் தவறு அல்லது நிலுவை தொடர்பான தகவல்களும் அடங்கும் — அவ்வப்போது சிட்டி யூனியன் வங்கியால் தீர்மானிக்கப்படும் தற்போதைய அல்லது எதிர்கால கடன் தகவல் நிறுவனங்களிடம் வங்கி பொருத்தமானதாகவும் அவசியமானதாகவும் கருதும் பட்சத்தில் பகிர்ந்துகொள்ள சிட்டி யூனியன் வங்கிக்கு அதிகாரம் உள்ளது என்பதை அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார். அதன்படி, அத்தகைய கடன் தகவல் நிறுவனங்களுக்குத் தகவல்களை வெளிப்படுத்துவதற்கான ஒப்புதலை கூடுதல் அட்டைதாரர்(கள்) வழங்கியதாகக் கருதப்படும். அத்தகைய நிறுவனங்கள், பரிசீலிக்கப்பட்ட தகவல்கள், தரவுகள் அல்லது அவற்றிலிருந்து பெறப்பட்ட விஷயங்களை வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் பிற கடன் வழங்குநர்களுக்கு மேலும் கிடைக்கச் செய்யலாம். கடன் தகவல் நிறுவனங்கள், கடன் ரெஃபரன்ஸ் முகமைகள் அல்லது கடன் வாங்குபவர்கள் தொடர்பான கடன் தகவல்களைச் சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பரப்புதல் ஆகிய நோக்கங்களுக்காக இந்திய ரிசர்வ் வங்கியால் உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்த நிறுவனமும் கடன் தகவல் முகமைகளில் அடங்கும்.
சிட்டி யூனியன் வங்கி அல்லது அதன் கூட்டாளிகள், துணை நிறுவனங்கள் அல்லது முகவர்களிடமிருந்து நேரடிச் சந்தைப்படுத்தல் அல்லது தொலைபேசி வாயிலான அழைப்புகள் எதையும் பெற அட்டைதாரர் விரும்பவில்லை என்றால், 'TRAI' இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள விவரங்களின்படி 'புரொவைடர் கஸ்டமர் பிரிஃபெரன்ஸ் ரெஜிஸ்டர்'-ல் பதிவு செய்வதன் மூலம் அவர் அத்தகைய அழைப்புகளைப் பெறுவதிலிருந்து விலகிக்கொள்ளலாம்.

சிட்டி யூனியன் வங்கி, பிற வணிக நிறுவனங்கள் அல்லது கார்ப்பரேட் நிறுவனங்களுடன் இணைந்து கோ-பிராண்டட் கிரெடிட் கார்டுகளை வழங்குகிறது. இந்த ஏற்பாட்டின் கீழ், சிட்டி யூனியன் வங்கி தனது வருவாய் அல்லது கட்டணங்களை கூட்டாளி வணிகர் அல்லது நிறுவனத்துடன் பகிர்ந்துகொள்ளக்கூடும். பதிவுசெய்தல், அட்டை அம்சத்தை பூர்த்தி செய்தல், சந்தைப்படுத்துதல், விளம்பர நடவடிக்கைகள் மற்றும் பலன்களைப் பெறுதல் ஆகியவற்றின் நோக்கத்திற்காக சிட்டி யூனியன் வங்கியுடன் பகிர்ந்துகொள்ளும் தகவலை கோ-பிராண்டு கூட்டாளிகளிடம் சிட்டி யூனியன் வங்கி பகிர்ந்துகொள்வதற்கும் வெளிப்படுத்துவதற்கும் அட்டைதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொள்கிறார்கள். விமான நிறுவனங்கள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் பிற சேவையாளர்கள் போன்ற கூட்டாளிகளுடன்

இணைந்து வழங்கப்படும் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டுகளுக்கு இது பொருந்தும்.

சிட்டி யூனியன் வங்கி பல்வேறு அம்சங்கள் மற்றும் சலுகைகளுடன் கூடிய கிரெடிட் கார்டுகளையும் வழங்குகிறது. இதனை வழங்குவதற்காக, அட்டைதாரருக்கு வவுச்சர்கள், தள்ளுபடிகள், கேஷ்பேக், உறுப்பினர் சலுகைகள் மற்றும் அட்டை பாதுகாப்புத் திட்டங்கள், கிரெடிட் ஷீல்ட், மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள் போன்ற காப்பீட்டுத் திட்டங்கள் போன்ற தயாரிப்பு அம்சங்கள், பலன்கள் மற்றும் பிற கூடுதல் மதிப்புள்ள சேவைகளை வழங்க, சிட்டி யூனியன் வங்கி பல்வேறு சேவையாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துகிறது. பதிவு செய்தல், அட்டை சார்ந்த வசதிகளை வழங்குதல், சந்தைப்படுத்தல், விளம்பர நடவடிக்கைகள் மற்றும் சலுகைகளைப் பெறுதல் ஆகிய நோக்கங்களுக்காக, சிட்டி யூனியன் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவையாளகளுடன் சிட்டி யூனியன் வங்கி அட்டைதாரரின் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் கூருணர்வுடைய தனிப்பட்ட தகவல்கள் உள்ளிட்ட தரவுகளைப் பெறவும், சேகரிக்கவும், செயலாக்கவும், பதிவு செய்யவும், பகிரவும் மற்றும் வெளிப்படுத்தவும் வெளிப்படையாக ஒப்புதல் அளித்து அதிகாரம் வழங்கியுள்ளனர்.

தகுதியான CSK/SRH கிரெடிட் கார்டுகளுக்கு வங்கி இலவச விமான விபத்து/தனிநபர் விபத்துக் காப்பீட்டை வழங்குகிறது. இந்தக் காப்பீடு ராயல் சுந்தரம் ஜெனரல் இன்சூரன்ஸ் கோ. லிமிடெட் நிறுவனத்தால் வழங்கப்படுகிறது, மேலும் க்ளைம் தீர்வு செய்வதற்கு அந்நிறுவனமே முழுப் பொறுப்பாகும். கார்டு செயல்படுத்தப்பட்ட நாளிலிருந்து காப்பீட்டுப் பாதுகாப்பு தொடங்கும். காப்பீட்டு நிறுவனத்தின் பாலிசி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி, 18 முதல் 65 வயதுக்குட்பட்ட வாடிக்கையாளர்களுக்குக் காப்பீட்டுப் பாதுகாப்பு கிடைக்கும். எந்தவொரு க்ளைம் தகராறு அல்லது தீர்வுக்கும் வங்கி பொறுப்பேற்காது. முன் அறிவிப்பின்றி காப்பீட்டு வழங்குநரை மாற்றுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. பாலிசி பாதுகாப்பு விவரங்கள், பரிந்துரை செயல்முறை மற்றும் க்ளைம் தொடர்புத் தகவல்கள் காப்பீட்டு நிறுவனத்திடம் கிடைக்கும். விதிமுறைகளின்படி தேவைப்படும்போது, கார்டுதாரரின் ஒப்புதல் மற்றும் பரிந்துரை விவரங்கள், பொருந்தக்கூடிய RBI வழிகாட்டுதல்களின்படி காப்பீட்டு நிறுவனத்தால் பதிவு செய்யப்பட்டுப் பராமரிக்கப்படும்.

**காப்பீட்டுக் கூட்டாளியின் தொடர்பு விவரங்கள்:**

ராயல் சுந்தரம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
வலைதளம்: www.royalsundaram.in
தொடர்பு எண்: 1860 425 0000 (கட்டணமில்லாதது)
மின்னஞ்சல்: cub.claims@royalsundaram.in

கடன் அட்டை ஒப்புதலுக்கான கால அவகாசம் மாறுபடக்கூடும் என்றாலும், விண்ணப்பித்த தேதியிலிருந்து கடன் அட்டை விநியோகிக்கப்படும் கால அளவு (TAT) 14 நாட்களாக இருக்கும் என்று அட்டையை வைத்திருப்பவருக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கடன் அட்டை விண்ணப்பத்தில் தங்கள் பெயரில் பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணை வழங்கியுள்ளதாக அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார். கடன் அட்டை

விண்ணப்பத்தின்போது வழங்கப்பட்ட கைப்பேசி எண், அட்டைதாரரின் பெயரில் பதிவு செய்யப்படவில்லை என்பது பின்னர் தெரியவந்தால், அந்த கைப்பேசி எண் மூலம் மேற்கொள்ளப்படும் கடன் அட்டை சார்ந்த எந்தவொரு நடவடிக்கைக்கும் அல்லது பரிவர்த்தனைக்கும் அவரே பொறுப்பாவார்.

இந்தியாவின் வங்கி நடைமுறைகள் மற்றும் தரநிலைகள் வாரியத்தின் (Banking Codes and Standards Board of India (BCSBI)) ஓர் உறுப்பினராக சிட்டி யூனியன் வங்கி உள்ளது. BCSBI விதிமுறைகளின் கீழ் எங்களது உறுதிப்பாடுகளைப் பார்வையிட, எங்கள் இணையதளத்தின் முகப்புப் பக்கத்தைப் பார்க்கவும்.

**இசைவுத் தீர்ப்புமுறை பிரிவு (Arbitration Clause)**

இந்த ஒப்பந்தத்திலிருந்து எழும் அல்லது இது தொடர்பான—அல்லது இதன் பொருள் விளக்கம், தாக்கம் அல்லது இதன்கீழ் தரப்பினரின் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்த—அனைத்து விதமான தகராறுகள், கருத்து வேறுபாடுகள், கோரிக்கைகள் அல்லது வினாக்கள் அனைத்தும், 'மத்தியஸ்த மற்றும் சமரசச் சட்டம், 1996' (Arbitration and Conciliation Act, 1996) அல்லது அதில் கொண்டுவரப்பட்ட சட்டரீதியான திருத்தங்களின் விதிகளின்படி, சிட்டி யூனியன் வங்கியால் நியமிக்கப்படும் ஒரு தனி நடுவரால் (sole arbitrator) தீர்த்து வைக்கப்பட வேண்டும். நடுவராகச் செயல்பட நியமிக்கப்பட்ட நபரின் உயிரிழப்பு, செயல்பட விருப்பமின்மை, மறுப்பு, கவனக்குறைவு, இயலாமை அல்லது தகுதியின்மை ஆகிய சூழல்களில், சிட்டி யூனியன் வங்கி ஒரு புதிய மத்தியஸ்தரைத் தனி மத்தியஸ்தராகச் செயல்பட நியமிக்கலாம். தீர்ப்பிற்கான காரணங்களை வழங்க வேண்டிய கட்டாயம் மத்தியஸ்தருக்கு இல்லை, மேலும் மத்தியஸ்தரால் வழங்கப்படும் தீர்ப்பு இறுதியானது மற்றும் ஒப்பந்தத்தின் அனைத்து தரப்பினரையும் கட்டுப்படுத்தும். மத்தியஸ்த நடவடிக்கை சென்னையில் மட்டுமே நடைபெறும்.

**தடை பிரிவு (Prohibition Clause)**

லாட்டரிச் சீட்டுகள், தடைசெய்யப்பட்ட இதழ்கள், பரிசுப் போட்டிகளில் பங்கேற்பு, 'கால்-பேக்' சேவைகளுக்கான கட்டணம் செலுத்துதல் அல்லது அந்நியச் செலாவணியை வெளியே எடுக்க அனுமதி இல்லாத பிற பொருட்கள் அல்லது செயல்பாடுகள் போன்ற தடைசெய்யப்பட்டவற்றை வாங்குவதற்கு, இணையத்திலோ அல்லது வேறு வகையிலோ சர்வதேச கடன் அட்டைகளைப் பயன்படுத்த முடியாது.

**FEMA (வெளிநாட்டுச் செலாவணி மேலாண்மைச் சட்டம்)**

a. இந்தியாவிற்கு வெளியே பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்காக அட்டையைப் பயன்படுத்துவது, பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு, குறிப்பாக RBI-யின் அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு விதிமுறைகள் மற்றும் அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம், 1999 ஆகியவற்றிற்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், நீங்கள் சட்டரீதியான தண்டனை நடவடிக்கைக்கு உட்படுத்தப்படலாம்.
b. மின்னணு/இணைய வர்த்தக தளங்கள் வழியாக வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத்திற்கு நேரடியாகவோ அல்லது

மறைமுகமாகவோ பணம் செலுத்துவதற்கு கடன் அட்டைகளைப் பயன்படுத்த முடியாது. ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின்படி இது தடை செய்யப்பட்டுள்ளது. கூடுதல் தகவல்களுக்குத் தயவுசெய்து சிட்டி யூனியன் வங்கியின் வலைதளத்தைப் பார்க்கவும்.

c. இந்த அட்டை இந்தியா மற்றும் வெளிநாடுகள் ஆகிய இரண்டிலும் பயன்பாட்டிற்குச் செல்லுபடியாகும். இருப்பினும், நேபாளம் மற்றும் பூட்டானில் அந்நியச் செலாவணி பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு இது செல்லுபடியாகாது.

## அட்டை கணக்கில் அங்கீகரிக்கப்படாத மின்னணு வங்கிப் பரிவர்த்தனைகள்

1. சிட்டி யூனியன் வங்கியிடம் செல்லுபடியாகும் கைப்பேசி எண்களை வழங்காத அட்டைதாரர்களுக்கு, ஏடிஎம் மூலம் பணம் எடுப்பதைத் தவிர்த்து, மின்னணுப் பரிவர்த்தனை வசதிகளை வங்கி வழங்காது.
2. அட்டைதாரருக்கு வழங்கப்படும் ஏதேனும் கணக்கு அறிக்கை அல்லது பதிவுகளில் உள்ள பரிவர்த்தனைகள் அல்லது இருப்பு விவரங்களில் ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால், அட்டைதாரர் அது குறித்து ஏழு (7) நாட்களுக்குள் சிட்டி யூனியன் வங்கிக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும்.
3. ஏழு (7) வேலை நாட்களுக்குப் பிறகு இதற்கு முரணான ஏதேனும் தகவல் சிட்டி யூனியன் வங்கிக்குக் கிடைத்தால், அட்டைதாரரின் கடப்பாடானது வங்கியின் இணையதளத்தில் உள்ள, வங்கியின் நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையின்படி தீர்மானிக்கப்படும்.
4. சிட்டி யூனியன் வங்கியால் பராமரிக்கப்படும் உங்கள் அறிவுறுத்தல்கள் மற்றும் அத்தகைய பிற விவரங்கள் (செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட பணம் உட்பட) அனைத்து பதிவுகளும், மின்னணு அல்லது ஆவண வடிவில், இங்குள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க, அத்தகைய அறிவுறுத்தல்கள் மற்றும் பிற விவரங்களுக்கு உறுதியான சான்றாகக் கருதப்படும்.
5. அறிவிப்பு நேரம் மற்றும்/அல்லது அட்டை கணக்கில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் அல்லது அக்குறிப்பிட்ட அட்டை கணக்கு தொடர்பான வேறு ஏதேனும் விவகாரம் குறித்து ஏதேனும் சர்ச்சை எழும் பட்சத்தில், சர்ச்சைக்குரிய பரிவர்த்தனையின் நேரம் மற்றும்/அல்லது அதன் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்கான உரிமை சிட்டி யூனியன் வங்கிக்கு உண்டு. மூன்றாம் தரப்பினரின் மோசடி காரணமாக உங்கள் அட்டை கணக்கில் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் நிகழும்போதோ அல்லது அத்தகைய மோசடியில் உங்களுக்கு எந்தப் பங்கும் இல்லாதபோதோ, உங்கள் பொறுப்பானது "வாடிக்கையாளர் பாதுகாப்பு - அங்கீகரிக்கப்படாத மின்னணு வங்கிப் பரிவர்த்தனைகளில் வாடிக்கையாளர்களின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு" குறித்த ரிசர்வ் வங்கியின் (RBI) சுற்றறிக்கையில் உள்ள வழிகாட்டுதல்களின்படி தீர்மானிக்கப்படும். அவ்வப்போது திருத்தப்படும் விதிமுறைகளில் செய்யப்படும் மாற்றங்கள் பொருந்தும் மற்றும் அவை கட்டுப்படுத்தக்கூடியவையாக இருக்கும்.
6. வாடிக்கையாளர் சேவை அல்லது வாடிக்கையாளர் குறைதீர்ப்பு தொடர்பான விவரங்களுக்கு, சிட்டி யூனியன் வங்கியின் இணையதளமான www.cityunion-bank.bank.in-ஐப் பார்க்கவும்.

**பிணையம் சார்ந்த கடன் அட்டைகள்**

1. பாதுகாப்புடன் கூடிய கிரெடிட் கார்டுகள் அல்லது சிட்டி யூனியன் வங்கியால் அனுமதிக்கப்பட்ட வேறு ஏதேனும் வசதிகளின் கீழ், அட்டைதாரர் வங்கிக்குச் செலுத்த வேண்டிய அனைத்துத் தொகைகளின் இறுதி நிலுவைக்கும், இந்த நிலையான வைப்புத்தொகை ஒரு தொடர் பிணையமாகச் செயல்படும்.
2. கடன் தவணை அல்லது கடன் வசதிகளைத் திரும்பச் செலுத்துவதில் தவறு ஏற்படும் பட்சத்திலோ அல்லது கோரப்படும்போது அவை திரும்பச் செலுத்தப்படாத நிலையிலோ, சிட்டி யூனியன் வங்கி பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்: நிலையான வைப்புத்தொகை அல்லது காலவரம்புள்ள வைப்புத்தொகையை (fixed/term deposit) முன்கூட்டியே பணமாக்குதல்; பிணையமாக வழங்கப்பட்ட அல்லது தன்வசம் உள்ள பத்திரங்கள் அல்லது வைப்புத்தொகைகளை ஈடுசெய்தல் (set off) அல்லது திரும்பப் பெறுதல்; அல்லது வங்கி நியாயமானதாகக் கருதும் வகையில் அவற்றை வேறொருவருக்கு மாற்றுதல் அல்லது ஒப்படைத்தல். மேலும், இச்செயல்முறைகள் மூலம் கிடைக்கும் நிகரத் தொகையைக் கொண்டு, சிட்டி யூனியன் வங்கி அல்லது அதன் கிளைகளில் உள்ள கணக்குகளில் அட்டைதாரருக்கு உள்ள கடன் கடப்பாடுகளை வங்கி தீர்த்துக்கொள்ளலாம்.
3. அட்டைதாரரின் தகுதியின் அடிப்படையில், பிணையம சார்ந்த கடன் அட்டையுடன் (secured Credit Card) இணைக்கப்பட்டுள்ள நிரந்தர வைப்புத்தொகையின் மீதான பற்றுரிமையை (lien) நீக்குவதற்கு சிட்டி யூனியன் வங்கிக்கு முழு அதிகாரம் உள்ளது.

**பொறுப்புத் துறப்பு:**

கோரிக்கைகளைப் பெறுதல் மற்றும் செயலாக்குதல், பதில்களைத் தயாரித்தல் மற்றும் அனுப்புதல் ஆகியவற்றில் ஏற்படும் எந்தவொரு தாமதம், இடையூறு, இடைநிறுத்தம், தீர்வு அல்லது வங்கியின் பிழை காரணமாக அல்லது பயனரின் தொலைத்தொடர்புச் சாதனம், ஏதேனும் சேவை வழங்குநரின் நெட்வொர்க் மற்றும் வங்கியின் அமைப்பு ஆகியவற்றிற்கு இடையே தகவல்கள் அல்லது செய்திகளைப் பரிமாற்றம் செய்வதில் ஏற்படும் ஏதேனும் தோல்வி, தாமதம், இடையூறு, நிறுத்தம், கட்டுப்பாடு அல்லது பிழை காரணமாக அல்லது பயனரின், வங்கியின் அமைப்பு, அல்லது எந்தவொரு சேவையாளர் மற்றும்/அல்லது அத்தகைய சேவைகளை வழங்கும் மூன்றாம் தரப்பினரின் நெட்வொர்க்கின் தொலைத்தொடர்பு சாதனங்களில் ஏதேனும் முறிவு, குறுக்கீடு, இடைநிறுத்தம் அல்லது தோல்வி காரணமாக பயனருக்கு அல்லது எந்த ஒரு நபருக்கும் ஏற்பட்ட முன்னரே கணிக்கத் தக்கதாக இருந்ததோ அல்லது இல்லையோ அப்படிப்பட்ட வருவாய், லாப, தொழில், ஒப்பந்த, எதிர்பார்க்கப்பட்ட சேமிப்புகள், அல்லது நல்லெண்ண இழப்பு, எந்த ஒரு சாதனத்தின் (மென்பொருள் உட்பட) பயன்பாடு அல்லது மதிப்பிழப்பு உட்பட (ஆனால் இவை மட்டுமல்ல) நேரடி, மறைமுக, அல்லது விளைவு இழப்பு அல்லது சேதத்திற்கும் சிட்டி யூனியன் வங்கியோ அல்லது அதன் ஊழியர்களோ, முகவர்களோ அல்லது ஒப்பந்ததாரர்களோ பொறுப்பேற்க மாட்டார்கள்.

சிட்டி யூனியன் வங்கி, தனது தயாரிப்புகள் தொடர்பாகத் தேவைப்படும் பட்சத்தில், தனது சொந்த முழுமையான முடிவின் அடிப்படையில், வெளிப்புறச் சேவையாளர்கள் அல்லது முகவர்களின் சேவைகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

- 21 வேலை நாட்களுக்குள் விண்ணப்பப் படிவத்தின் நிலையை சிட்டி யூனியன் வங்கி தெரிவிக்கும்.
- எந்தவொரு சலுகை, பரிசு, வவுச்சர், ரிவார்டு புள்ளிகளை மீட்டல் (redemption), அல்லது அட்டையைச் செயல்படுத்துதல் அல்லது ரத்து செய்தல் ஆகியவற்றுக்காக, சிட்டி யூனியன் வங்கி ஒருபோதும் உங்கள் அட்டையின் CVV, PIN, OTP அல்லது
- இணையச் சேவைக்கான கடவுச்சொல் ஆகியவற்றைக் கேட்காது. அழைப்பு/மின்னஞ்சலில் வரும் அத்தகைய கோரிக்கைகளை தயவுசெய்து பொருட்படுத்தாதீர்கள். எந்தவொரு தொடர்புகொள்ளலுக்கும் முன்னதாக, சிட்டி யூனியன் வங்கியின் தொடர்பு எண்களை அதிகாரப்பூர்வ இணையதளத்தில் சரிபார்க்கவும்.
- எந்தவொரு இணையவழி அல்லது மின்னணு வர்த்தகப் பரிவர்த்தனையையும் மேற்கொள்ளும் முன், அந்த இணையதளம் மற்றும்/அல்லது இணையதள போர்ட்டலின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளவும். உங்கள் பணத்தைத் திருடக்கூடிய போலி இணையதளங்கள் குறித்து விழிப்புடன் இருங்கள்.
- வங்கியால் வழங்கப்படும் அட்டையானது வாடிக்கையாளரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்கானது. மூன்றாம் தரப்பு ஒன்றின் சார்பாகவோ அல்லது அவர்களின் நலனுக்காகவோ மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளை வங்கி ஊக்குவிப்பதோ அல்லது ஆதரிப்பதோ இல்லை.

சர்வதேசப் பரிவர்த்தனைகள் தொடர்பான வணிகர் ரீதியிலான பணத்தைத் திரும்பப் பெறுதல் / கருத்து வேறுபாடுகள் ஏற்படும் பட்சத்தில், நாணய மாற்று விகித ஏற்ற இறக்கத்தால் உண்டாகும் எந்தவொரு விகித வேறுபாட்டையும் வாடிக்கையாளரே ஏற்க வேண்டும்.

---